பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 25 சனிக்கிழமை (11.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 318

# அனைத்துக் கட்சி மாநாட்டை இன்று கூட்டுகிறார் ஜனாதிபதி

## தமிழ்க் கூட்டமைப்புக்கு அழைப்பு இல்லை ஐ.தே.க., ஜே.வி.பி. இரண்டும் பங்கேற்கா

கொழும்பு, ஒக்ரோபர் 11

**இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தென்னிலங்கை பிரேரிக்கும் திட்டம் குறித்து ஆராய்வதற்காக சர்வகட்சி மாநாடு ஒன்றை இன்று கூட்டுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கின்றார்.**

ஏற்கனவே சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்தைப் பகிஷ்கரித்து வரும் ஐ.தே.கவினருக்கும் ஜே.வி.பியினருக்கும் மற்றும் அனைத்துக் கட்சிகளுக்கும் இக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட் டமைப் பினருக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை. எனினும் இன்று நடைபெறவுள்ள சர்வ

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் புதிய ஆளுநர் டிக்ஸன் பண்டார

திருகோணமலை, ஒக்.11

வடமாகாணத்தின் புதிய ஆளுநராக டிக்ஷன் டெல பண்டார நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டதை அடுத்து வடமாகாணத்தின் முதலாவது ஆளுநராக முன்னாள் பொலிஸ் மா அதிபர் விக்ரர் பெரேரா நியமிக்கப்பட்டார். அவர் அந்தப் பதவியை இராஜினாமா செய்ததை அடுத்தே டிக்ஷன் டெல பண்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் நேற்று அகோரக் குண்டு வீச்சு; பளைப் பகுதி ஆசிரியையும் மகளும் பலி!

வவுனியா, ஒக்.11

பரந்தன் வான்பரப்பை நேற்று வட்ட மிட்ட அரச விமானங்கள் தொடர்ச்சியாக நான்கு தடவைகள் குண்டுகளை வீசின.

கிளிநொச்சி நகருக்கு வடக்கே சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பரந்தன் குமரபுரம் பகுதி மீது நேற்றுக்காலை 6.25 மணியளவில் அரச விமானங்கள் தாக்குதல்களை நடத்தின.

அத்தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் கொல்லப்பட்டனர். அதே குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர் உட் பட 7 பேர் படுகாயமடைந்தனர். 12 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. குமரபுரம் முருகன் கோயிலும் அப்பகுதியில் இருந்த கடை ஒன்றும் தரைமட்டமாக்கப்பட்டன என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரி வித்தன.

பளை மத்திய கல்லூரியில் கடமையாற்றும் ஆசிரியரான அருமைநாதன் சந்திர தேவி (வயது - 46) என்பவர் சம்பவ இடத் திலேயே கொல்லப்பட்டார். அவருடைய மகள் அருமைநாதன் அர்ச்சிகா (வயது - 10) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனளிக்காமல் அங்கு உயிரிழந்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுறுத்தல் உள்ள அமைச்சர்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஒக்.11

மூத்த அமைச்சர்கள் மற்றும் அச்சுறுத்தல் உள்ள அமைச்சர்கள் ஆகியோரின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ படை உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவில் சிறப்புக்குழு ஒன்றினை அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சரவைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, அமைச்சர்கள் கூடுதலாக பயணிக்கும் வீதிகளின் கரையோரமாகவுள்ள சிறிய பெட்டிக்கடைகளை அகற்றுவதுடன், நடைபாதை வியாபாரிகளையும் வேறு இடங்களுக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## மறியல் போராட்டத்துக்கு புறப்பட்ட போது அண்ணாசாலையில் வைத்து வைகோ கைது!

சென்னை, ஒக்.11

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக - மத்திய அரசைக் கண்டித்து - நேற்றுச் சென்னையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட முயன்ற ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டார்.

இலங்கையில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் இனப் படுகொலையைக் கண்டித்தும், இலங்கைக்கு இராணுவ உதவி செய்யும் மத்திய அரசைக் கண்டித்தும், இலங்கைத் தமிழர்களுக்கு உணவுப் பொருள்கள், மருந்து ஆகியவற்றை வழங்கிட மத்திய அரசின் அனுமதி வேண்டியும் ம.தி.மு.க. சார்பில் நேற்று மறியல் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.



(16ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைக்குண்டு வெடித்த பொரலஸ்கமுவவில் நேற்றுத் தேடுதல்; 3 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, ஒக். 11

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பொரலஸ்கமுவவில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையில் மலையகத் தமிழ் இளைஞர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை நடைபெற்ற இந்தத் தேடுதல் நடவடிக்கையில் பொரலஸ்கமுவவில் தொழில் புரியும் மலையகத் தமிழ் இளைஞர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பயணம் செய்த வாகனத் தொடரணி மீது நேற்றுமுன்தினம் பிற்பகல் பொரஸ்கமுவ பிரிவேனா சந்தியில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் பின்னர் தேடுதல் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, நேற்றுக்காலை முதல் கொழும்பு நகருக்குள் வந்த வாகனங்கள் அனைத்தும் பிரதான நுழைவாயில்களில் படையினரால் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன என்றும் அறியமுடிந்தது. (அ-சி)

## வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்துவதில் பெரும் சிக்கல்கள்

### முல்லைத்தீவு அரச அதிபர் தகவல்

வவுனியா, ஒக். 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு தங்குமிட வசதி ஏற்படுத்துவதில் பெரும் சிக்கல்களும் சிரமங்களும் தோன்றி உள்ளன.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இப்படிக் கூறினார்.

அரச அதிபர் அங்குள்ள நிலமை குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

மழைகாலம் ஆரம்பித்துவிட்டது. தற்காலிக கொட்டகைகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. மக்கள் கூடுதலாகப் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். பொது மண்டபங்களிலும் தங்கியிருக்கிறார்கள்.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் அவசரமாக பாடசாலைகளை நடத்த வேண்டிய தேவைகள் இருக்கின்ற படியால் அங்குள்ளவர்களை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்திதருமாறு கல்வித் திணைக்கள பணிப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

**14000 கொட்டில்கள் தேவை**

தற்காலிக கொட்டகைகளை அமைக்கும் பணி மிகவும் கஷ்டமாகி உள்ளது. தற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான புதிய பாதை மாற்றத்தால் உணவு வாகனத் தொடரணி செல்வதில் தாமதம்

வவுனியா, ஒக்.11

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்திற்கு செல்வதற்கான போக்குவரத்துப் பாதைகளில் படைத் தரப்பு மாற்றம் செய்திருக்கின்றமையால் அப்பகுதிக்கு உணவு வாகனத் தொடரணிகள் செல்வதில் தாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

படை நடவடிக்கை காரணமாக இடம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்பில் புதனன்று தமிழ் வர்த்தகர் கடத்தப்பட்டார்

நீர்கொழும்பு, ஒக். 11

நீர்கொழும்பில் நகரில் வைத்து நேற்று முன்தினம் தமிழ் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் தவராசா என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக அவரது உறவினர்கள் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை நேற்றுச் செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவனும், திரு.திருமதி தருமராசா மாலினி தேவி தம்பதியரின் செல்வப் புதல்வனுமாகிய

**செல்வன் டிசாந்தன்**

2008 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையிட்டு பெருமை அடைவதோடு அவரை நெறிப்படுத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர்களை மற்றும் ஆசிரியர்களான கலாமோகன், அருட்பிரகாசபிள்ளை, அன்பழகன் ஆகியோரையும் பாராட்டுவதுடன் அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க ஈஞ்சடி ஞான வைரவர், சுதுமலை புவனேஸ்வரி அம்மனை வேண்டுகிறோம்.

மானிப்பாய். (79138)

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்



**வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வேலணை மேற்கு, அம்பிகைநகர் ஸ்ரீமகேஸ்வரி அம்மன் ஆலய புனரமைப்புக்கு நிதியுதவி வழங்கிய வடமாகாண விசேட செயலணித் தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் E.P.D.P கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு.கே. என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் யாழ்.மாவட்ட அமைப்பாளர் (E.P.D.P) உதயன் மற்றும் தீவகப் பொறுப்பாளர் போல் அவர்களையும் மற்றும் உறுப்பினர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

வேலணை மேற்கு.

அம்பிகை நகர் ஸ்ரீமகேஸ்வரி
அம்பாள் ஆலய பரிபாலன
சபையினர்.

# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் லிங்கேஸ்வரன்



சாவகச்சேரி, நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசிப்பவருமாகிய சோமசுந்தரம் லிங்கேஸ்வரன் நேற்றுமுன்தினம் (09.10.2008) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சோமசுந்தரம் மற்றும் பரமேஸ்வரி (கனடா) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகநாதன் (நுணாவில்) மற்றும் செல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியை, கோப்பாய்) தம்பதியினரின் மருமகனும், தேவகியின் (ஆசிரியை, கனடா) அன்புக் கணவரும், தர்சிகா, ரயிக்கா, கிரிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மங்களேஸ்வரி, அரசநாயகம் (சவுதி), கமலேஸ்வரி, சிவநாதன் (ஆஸ்திரேலியா), குகேந்திரன் (ஹொலண்ட்), விக்னேஸ்வரன் (ஜேர்மனி), குணேஸ்வரி, தர்மரத்தினம் (கனடா)ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2008 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உப தபாற்கந்தோர் வளவு,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
தி.வெற்றிவேலு
(மாமன்)

## மகேஸ்வரி சண்முகம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இல.80, கன்னாரத்தெரு, கொழும்பு-13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சண்முகம் நேற்று (10.10.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதியினரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Dr.சண்முகத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற தவரத்தினத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சந்திரேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி (கொழும்பு), மனோகரன் (பரந்தன்), பாஸ்கரன் (கனடா), திருமகள் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை), விஜயபாலன் (கனடா), ஸ்ரீஸ்கந்தா (உதவிக் கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு), சிறிகுமார் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், நவரத்தினம், காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் ஜெயமலர், வசந்தமலர் (கனடா), காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் விஜயந்தி (கனடா), நந்தினி (கொழும்பு), கலாநிதி ஆகியோரின் பாசமிகு மாமியும், அருள்ஜோதி, தக்ஷினி, தவஜோதி, கிருஷ்ணபாலன், கிருஷ்ணபவானி, கிருஷ்ணரூபன், தர்ஷன், பமித்திரா, ஸ்ரீபிரகலாதன், கீர்த்தனா, லக்ஷினி, கீர்த்தன், லக்ஸ்மன், ராதிகா, ரவீந்திரன் ஆகியோரின் பேர்த்தியும், தனச்செயன், சஞ்ஜீவன், சிந்துஜா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (13.10.2008) திங்கட்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'பிரசாந்தி இல்லம்',*
*மானிப்பாய் வீதி,*
*ஆனைக்கோட்டை.* T.P.0112471370

தகவல்:
ச.சிறிகுமார் (மகன்),
பொ.திருமகள் (மகள்).

## முகாமைத்துவ பீட வழிகாட்டல் விரிவுரை

யாழ்ப்பாணம், ஒக்.11

முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடம் 2007/2008ஆம் ஆண்டிற்கான முதலாம் வருட மாணவர்களுக்குரிய வழிகாட்டல் கருத்தரங்கும் விரிவுரையும் எதிர் வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு வணிகத்துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

வணிகம், முகாமைத்துவம் ஆகிய இரு கற்கைநெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட சகல மாணவர்களையும் அன்றையதினம் சமூகமளிக்குமாறு பீடாதிபதி கே.தேவராஜா கேட்டுள்ளார்.


**DV 2010க்கான அமெரிக்கா லொத்தர் விசா**



DV 2010 அமெரிக்கா லொத்தர் விசாவிற்கான விண்ணப்பங்களை எமது நிறுவனத்தினூடாக அனுப்பிக்கொள்ளப்படும். மற்றும் இதற்கான மேலதிக விபரங்களை எமது நிறுவனத்தினுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆர் சீலோசர் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தெ.பே. (கல்வியங்காடு ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

**எழுதுவினைஞர் தேவை**

தமிழ் மொழியில் பணியாற்றக்கூடிய மொழி அறிவும் உறுப்பான கையெழுத்தும் அமைந்த பெண் எழுதுவினைஞர் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வாழ்பவர்கள் மட்டும் 13,14,15-10-2008 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணிக்கும் பிற்பகல் 4.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


**திருத்தி வாசிக்கவும்**

10.10.2008 திகதி உதயன் நாளேட்டில் 10ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள "பாராட்டி வாழ்த்துகிறோம்" என்ற விளம்பரத்தில், வாழ்த்துபவர்கள் என்ற தலைப்பில் வெளியாகியுள்ள பெயர்களில் சின்னம்மா- சண்முகநாதன் (ஜே.பி) என்று பிரசுரமானது தவறாகும்.

சின்னம்மா- சண்முகநாதன் (வே.பி) என்று திருத்தி வாசிக்கவும்.


**விற்பனைக்கு**

கருங்கல்லுச் சல்லி, வைரக்கல்லுச்சல்லி மற்றும் 32 நீளமுள்ள முக்கோண அமைப்பான முன்று கேடர்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 61, இராமலிங்கம் வீதி, முடமாவடி.

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள NISSAN SUNNY வெள்ளைநிறக் கார் விற்பனைக்குண்டு.

13,SRI XXXX
Contact:- Week days 0777033325
Weekend days 0212264143

**விற்பனைக்கு**

வெஸ்பா ஸ்கூட்டர்(இத்தாலி) கட்டில்கள் (டபிள், சிங்கிள்) 100W AMP ஸ்பீக்கர் BOX02, 10", என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:- சி.சி.நாதன்
இல. 16/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்.
T.P.NO. 077 6146434

**வாடகைக்கு/விற்பனைக்கு**

ரெஜி போமினால் வடிவமைக்கப்பட்ட பலதரப்பட்ட வடிவங்களிலும் வண்ணமயமாக்கப்பட்ட ஐசிங்கேக் BOUQUET வகைகள், பிறந்ததினம், REGISTRATION, திருமணவைபவம், பூப்புனித நீராட்டு விழா போன்ற பல வகையான தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடிய வகையில் குறைந்த வாடகைக்கும், விற்பனைக்கும்....
உடன் நாடுங்கள்
இல. 57 K.K.S.
T.P.077 6701461


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பகவதி பாலசுப்பிரமணியம்

தம்பசிட்டி, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டி, கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி பகவதி பாலசுப்பிரமணியம் 08.10.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியத்தின் அன்புத் துணைவியும், பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி), கதிர்காமத்தம்பி (இரசாயனவியலாளர்), சந்திரசேகரம் (பொறியியலாளர்), காலஞ்சென்ற இராஜலஷ்மி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகிருஷ்ணகுமாரி, சகுந்தலா, திருக்குமாரி, காலஞ்சென்ற ஈஸ்வரநாதன் (வைத்தியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரிகா (அபிவிருத்தி உதவியாளர் - நிதி), சோபனா (மாணவி, M.Sc பேராதனைப் பல்கலைக்கழகம்), அகிலன் (முகாமையாளர்), வாணி (வைத்தியர்), உமா (சட்டத்தரணி), ஐங்கரன் (உயர்தர உயிரியல்துறை மாணவன்), காண்டீபன் (பொறியியலாளர்), முகுந்தன் (வைத்தியர்), சுகந்தி (கலைப்பட்டதாரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சைலயா, கிருத்திகா, துவாரகன், பிருந்தா, மகிலன், பவனேஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.10.2008) சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மதியம் 2 மணிவரை ஜெயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*03, கொத்தலாவெல காடின்ஸ்,*
*கொழும்பு 04.*
*தொலைபேசி - 0112589559*

தகவல்:
பிள்ளைகள்

## தியாகராஜா சுரேந்திரன் (சுரேன்)

(B.Sc Dip in IT, ஆசிரியர், ஹைலன்ட்ஸ் கல்லூரி, ஹட்டன்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஹட்டனை வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா சுரேந்திரன் 08.10.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராஜா - ருக்குமணி (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சி.நடராஜா தம்பதியினரின் அன்பு மருமகனும் மற்றும் அன்னபூரணியின் (ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், தயாபரனின் (முகாமையாளர், செலிங்கோ இன்சூரன்ஸ், கொழும்பு) அன்பு சகோதரனும், திருமதி த.நாகலதா (ஆசிரியை, சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை), குகநேசன் (யாழ்.பெற்றோலிய கூட்டுத்தாபனம்), சிவநேசன் (உஷா ஏஜன்சி, யாழ்ப்பாணம்), அருள்நேசன் (மிருக வைத்தியர், கனடா), கலைவாணி (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), பரமேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், சுகந்தி, சுகந்தி (N.S.P திருநெல்வேலி), அருணாசினி (கனடா) ஆகியோரின் சகோதரனும், சாய்சுருதி, சாய்ஹரிணி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று மு.ப.10 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கொழும்பு.*
*0777204959*

தகவல்:
தி.தயாபரன்
(சகோதரன்).

## கந்தையா செல்லத்துரை



தாவடி, அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா-செல்லத்துரை (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் தங்கம்மா (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும் சுஜீர்த்தா (லண்டன்), சசிகலா (லண்டன்), செந்தில்குமரன் (கனடா), நிருஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் கிரிதரன் (லண்டன்), நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் மகேஸ்வரி (நோர்வே), சறோஜினிதேவி ஆகியோரின்சகோதரனும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் பரமேஸ்வரன் (கனடா), திருமதி புரந்திரதாசன் (கனடா), திருமதி நித்தியானந்தன் (கனடா), திருமதி தேவறஞ்சன் (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன், மற்றும் குணரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் யஷான், யனுசினி, சர்வஜன், சர்வஜி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"குமரன் வாசம்",*
*மாரிய புலம்.*
*தாவடி வடக்கு,*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தியாவைச் சமாளிப்பதற்காக இங்கு அனைத்துக் கட்சிக் கூட்டம்

'தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டியது போல' என்பார்கள்.

அது மாதிரித்தான் புதுடில்லியில் 'சூடு' கொடுக்க, கொழும்பில் அனைத்துக் கட்சி மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு இல்லை. அமைதி வழியில் - சமாதானப் பேச்சு மூலமான - இணக்கத் தீர்வே சாத்தியமானது என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றது இந்திய அரசு.

யுத்தவெறி முனைப்பில் தீவிரம் கொண்டலையும் 'மஹிந்த சிந்தனை' அரசுக்கு இந்தியா இதனைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிவருகின்றது.

புலிகளோடு யுத்தம் நடத்துவது வேறு விடயம். ஆனால் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் - நியாயமான - தீர்வு யோசனை ஒன்றை இலங்கை அரசு முன்வைப்பது அதைவிடமுக்கியமான விடயம் என்று புதுடில்லி, தற்போதைய மஹிந்தரின் அரசு பதவியேற்ற காலம் முதலே அதற்கு வலியுறுத்தி வருகின்றது.

இந்தியாவின் கோரிக்கைப்படி தீர்வுக்கான தனது திட்டத்தைத் தனது அரசு விரைவில் வெளியிடும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து - இந்தியாவுக்கு உறுதி கூறி வந்தார்.

இந்திய அரசுத் தலைவர்களுடனான தனது தொடர்பாடல்களின் போது இப்படி உறுதி கூறி வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தீர்வுத் திட்டத்தைத் தனது அரசு வெளியிடுவதற்கான கால அவகாசம் குறித்தும் இந்தியத் தரப்புக்குக் கோடிகாட்டி வந்தார்.

இந்த வரிசையில் கடந்த 2006 இறுதியில் இந்தியத் தலைமைகளுடன் நடந்த சந்திப்புகளின்போது அடுத்த ஆண்டு ஜனவரியில் (2007 ஜனவரியில்) இனப்பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தைத் தமது அரசு வெளியிடும் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஆனால் காலங்கள் கடந்தனவே தவிர எதுவும் நடக்கவேயில்லை. - அவ்வப்போது உறுதி மொழிகளை வழங்குவதைத் தவிர.

ஒவ்வொரு தடவையும் தீர்வுக்கான தனது அரசின் திட்டத்தை இதோ வெளியிடப் போகின்றார் என்பது போல நடிப்புக் காட்டிக்கொண்டே மறுபுறத்தில் தனது யுத்த தீவிரத் திட்டத்தைத் தந்திரோபாயமாக முன்னெடுத்து வந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

புதுடில்லியும் இந்த இழுத்தடிப்புகளுக்கெல்லாம் விட்டுக் கொடுத்துப் பார்த்துக்கொண்டே இருந்தது.

ஆனால் நிலைமை இப்போது எல்லை மீறிவிட்டது. புதுடில்லி இனியும் பொறுக்கும் - ஏமாறும் - நிலையில் இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான கொழும்பு சிங்கள அரசின் யுத்தத் தீவிரத்தை சகித்துக்கொள்ள முடியாது என்று ஏற்கனவே பொங்கிக் கிளம்பிவிட்டது தமிழகம்.

தமிழகத்தின் உணர்வெழுச்சியை உள்வாங்கி, காத்திரமான முறையில் தான் பங்காற்றாவிட்டால், அந்நிலைமை தனது அதிகாரத்தின் அடி அத்திபாரத்தையே ஓர் உலுப்பு உலுப்பி விழுத்திவிடும் என்பது புதுடில்லிக்கு நன்கு தெரியும்.

அதனால், 'வாக்குறுதி ஜாலம் போதும்; தீர்வுக்கான உங்கள் திட்டத்தை செயலில் வெளிப்படுத்துங்கள்!' என்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கொழும்புக்கு வேறு வழியின்றி உணர்த்திவிட்டது புதுடில்லி.

தனது அரசு தப்பிப் பிழைத்து நீடித்திருக்க வேண்டும் என்றால் தமிழகத்தைச் சமாளித்தாக வேண்டும் என்ற இக்கட்டு புதுடில்லிக்கு. அதனால் தமிழகத்தை 'தாஜா' செய்வதற்காக குறைந்தபட்சம் ஏதேனும் ஆக்கபூர்வமாகச் செய்வதாகவேனும் வெளியில் காட்டுங்கள் என்ற அழுத்தம் புதுடில்லியில் இருந்து கொழும்புக்குப் பறந்து வந்துள்ளது.

இலங்கையின் புதுடில்லிக்கான துணைத் தூதரை இந்திய அரசின் சார்பில் அதன் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் அழைத்துக் காட்டமாக 'சூடு' கொடுத்தபோதே அதைச் சமாளிக்கக் கொழும்பு மற்றொரு நாடகம் ஒன்றை நடத்தும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அதன்படி இப்போது அனைத்துக்கட்சி மாநாடு என்ற நாடகத்தின் திரை விலகும் நிகழ்ச்சி இங்கு அரங்கேறுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இன்று அனைத்துக் கட்சி மாநாடு அழைக்கப்பட்டிருப்பது இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் ஒன்றைக் கண்டுபிடிப்பதற்காக அல்ல. அப்படியான ஒரு முயற்சியிலும் மஹிந்த அரசு ஈடுபட்டிருக்கின்றது என்று காட்டுவதன் மூலம் இந்தியாவின் காதில் பூச்சுற்றவும், அதன் வாயிலாக இந்தியாவில் - குறிப்பாகத் தமிழகத்தில் - எழுந்துள்ள ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சியை சமாளிக்கவுமே என்பது சொல்லாமல் புரியத்தக்கது.

தமிழகத்திலும் முதல்வர் கலைஞர் கருணாநிதி ஈழத் தமிழர் விவகாரத்தை ஒட்டிக் கூட்டியிருக்கும் அனைத்துக் கட்சிக் கூட்டமும் செவ்வாயன்று சென்னையில் நடைபெறுகின்றது. கொழும்பு அரசு 'பம்மாத்துக்கு' கூட்டும் அனைத்துக் கட்சிக் கூட்டம் குறித்து, சென்னை அனைத்துக் கட்சிக் கூட்டம் காத்திரமான பதிலடி தரும் என எதிர்பார்க்கலாம்.

# யாழ்ப்பாணத்தில் 'கமநெகும' நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 42 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள்

## இவ்வருட இறுதிக்குள் மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்.மாவட்டத்தில் 'கமநெகும' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 110 அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கென தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு 4கோடி 20 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கல்வி அபிவிருத்தி, வடிகால் புனரமைப்பு, நீர் விநியோகம், மின் விநியோகம், கூட்டுறவு அபிவிருத்தி, சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளி அபிவிருத்தி ஆகிய திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படவுள்ளன.

வேலணையில் 12 திட்டங்களும், காரைநகரில் 2திட்டங்களும், யாழப்பாணத்தில் 32 திட்டங்களும், நல்லூரில் 6 திட்டங்களும், உடுவிலில் 9 திட்டங்களும்-

தெல்லிப்பளையில் 9 திட்டங்களும், சாவகச்சேரியில் 15 திட்டங்களும், கரவெட்டியில் 13 திட்டங்களும் பருத்தித்துறையில் 5 திட்டங்களும், மருதங்கேணியில் 3 திட்டங்களும் மேற்கொள்வதற்குத் தேசநிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுஅனுமதி வழங்கியுள்ளது.

இந்த வேலைத்திட்டங்கள் யாவும் பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த வருட இறுதிக்குள் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட செயலகம் மேற்கொண்டு வருகின்றது என யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். (50-202)

# தென்னிந்தியத் திருச்சபை யாழ்.ஆதீனத்தின் 61ஆவது வருடாந்தப் பெருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.11

இலங்கை தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.ஆதீனத்தின் 61ஆவது வருடாந்த ஆதீனப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள திருச்சபையின் ஆலயத்தில் பேராயர் டானியல் தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நன்றி செலுத்தும் வழிபாடு, குருத்துவ அபிஷேகம் என்பன இந்த விழாவில் இடம்பெறும்.

தேவகிராமம் திருச்சபை ஊழியர் ஜெயப்பிரகாசம் தாவீது, ஹட்டன் திருச்சபை ஊழியர் கணேசன் றொபின்சன் சிவபாலன் ஆகியோர் உதவிக் குருக்களாகவும்-

சுகவாழ்வகஇணைப்பாளர்வண.கலாநிதி ராஜசீலன் டரன்ஸ் மரியோ அன்டோனியோ, அக்கரைப்பற்று ஊழியர் வண.உதயணன் சர்மா ஆகியோர் குருக்களாகவும் அபிஷேகம் செய்யப்படவுள்ளனர்.

முற்பகல் 11.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கிறிஸ்தவ கலை பண்பாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (50-202)

# முருங்கைக்காய் பிடுங்கச் சென்றவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், ஒக்.11

இரவுவேளையில் நிலவு வெளிச்சத்தில் முருங்கைக்காய் பிடுங்கச் சென்றவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியானார்.

இந்தச் சம்பவம் அல்லாரை வடக்கு கொற்புலவு மயானத்திற்கு அண்மையில் இரவு 8.40 மணிக்கு இடம் பெற்றது.

அல்லாரை தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் தர்மேந்திரன் (வயது51) என்பவரே இச்சம்பவத்தில் மரணமானவராவார்

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ததை அடுத்து நீதிவான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டார். (202-207)

# ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு குறுநாடக ஆக்கத்தில் மாகாண மட்டத்தில் முதலிடம்

குறுநாடக ஆக்கப்போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

குறுநாடக ஆக்க மேற்பிரிவுப் போட்டியில் ஜயந்தினி கரிகரன் என்ற மாணவியே முதலிடத்தைப் பெற்றவராவார்.

இவர் அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறும் தேசியமட்டப் போட்டியில் இவர் பங்குபற்றவுள்ளார். (204)

## யாழ்ப்பாணம் - வடமராட்சி இடையேயான

# இ.போ.சபையின் பஸ் சேவைகள் சீரின்மையால் தனியார் வாகனங்களில் பயணிக்கும் ஊழியர்

வடமராட்சி, ஒக்.11

வடமராட்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையேயான இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்சேவைகள் சீரின்மையால், வடமராட்சிப் பிரதேச அரச உத்தியோகத்தர்கள் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாண நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் பருவகாலப் பயணச்சீட்டுக்களைப் பெற்று இ.போ.ச. பஸ்களில் கடமைக்காக வந்து சென்றனர்.

தற்போது பஸ்களுக்கு வேண்டிய ரயர் போன்ற உதிரிப்பாகங்கள் இன்மையால் பஸ்சேவைகள்யாவும்மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அரச உத்தியோகத்தர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து அரச உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து 'ஹைஏஸ்' போன்ற தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி தமது கடமைக்காக வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. (202-236)

# யாழ்ப்பாணத்தின் அண்ணாவிமார்கள் இணைந்து வழங்கும் 'சங்கிலியன்' கூத்து

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் சங்கிலியன் நாட்டுக்கூத்தின் மேடையேற்றமும், நாட்டுக் கூத்துப் போட்டிக்கான பரிசளிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெவுள்ளன.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.அருளேஸ்வரி வேதநாயகமும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக, திருமறைக் கலாமன்றத்தால் அண்மையில் நடத்தப்பட்ட தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டியில் வெற்றியீட்டிய கூத்துக்களுக்கான பரிசளிப்பு இடம்பெறவுள்ளது.

இதன்போது முதலிடத்தைப்பெற்ற பாஷையூர் வளர்பிறை நாடகமன்றத்தின் 'முத்தா மாணிக்கமா', இரண்டாம் இடத்தைப்பெற்ற நாவாந்துறை சென். மேரிஸ் முத்தமிழ் மன்றத்தின் 'விசய மனோகரன்', மூன்றாம் இடத்தைப் பெற்ற குருநகர் புனித யாகப்பர் கலை மன்றத்தின் 'போர்க்களம்' ஆகிய நாட்டுக்கூத்துக்கள் பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளன.

தொடர்ந்து, நிறைவு நிகழ்வாக, பல கிராமங்களையும் சேர்ந்த நாட்டுக்கூத்து அண்ணாவிமார்களையும், மூத்தகலைஞர்களையும்இணைத்து திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'சங்கிலியன்' நாட்டுக் கூத்து மேடையேற்றப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் பல ஆண்டுகளின் பின்பு அண்ணாவிமார்கள் பலரும் இணைந்து நடிக்கும் கூத்தாக 'சங்கிலியன்' அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 26 | 12.10.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.ப. 04.22வரை |
| நட்சத்திரம் : | சதயம் |
| | மு.ப. 07.19 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# வங்கியாளர் சங்கத்தின் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல வங்கிகளினதும் கிளைகள் மற்றும் அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ந.சிவரட்ணம் கேட்டுள்ளார். 202)

# கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அச்சுவேலி, ஒக்.11

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் 2009ஆம் ஆண்டில் மாணவர்களை அனு மதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திஅடைந்த வர்களிடம் இருந்து 11 பாட நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் 24 பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் இந்த வருடம் 11 பாடநெறி களுக்கு மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பட்டதாரிகளைத் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இணைத்து ஒன்றரை வருட பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் பட்டதா ரிகளை இணைத்துக் கொள்வதற்கு ஏற்ற பாடத்துறைகளைத் தவிர்த்து, ஏனைய 11 பாடத் துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவ ரங்களை 10.10.2008 ஆம் திகதிய வர்த்த மானியில் பார்வையிடலாம். (203-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 13.09.2008 அன்று சிவபதமடைந்த எமது பாசமிகு குடும்பத்தலைவர்

அமரர்

**சோமசுந்தரம் கணபதிப்பிள்ளை**

தோற்றம்:05.02.1931
மறைவு: 13.09.2008

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (11.10.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் வருகைதந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

மாவடிப் பிள்ளையார் கோவிலடி
மீசாலை கிழக்கு, மீசாலை. (சி–555066)

மனைவி,
பிள்ளைகள்.

## ஓராண்டு நிறைவில்...



அமரர்

**லில்லி பிலோமினா பிரான்சிஸ்**

தோற்றம்: 17-03-1947
மறைவு:11-10-2007

எம் இரத்தத்தின் துளியாகி
உயிரின் துடிப்பாகி - பாச
மழை பொழிந்த
சோலைக்குயிலே அம்மா - நீங்கள்
நடந்த பாதத் தடங்கள் - இன்றும்
பசுமையாய் மிளிர்ந்திட
பறந்தோடியதே ஓராண்டு
இதயச் சுவர்கள் வெடித்து
இரத்தக் கண்ணீர் சொரிய
இறைதுணை வேண்டுகிறோம்
இளைப்பாறிட உம் ஆன்மா.

இன்று (11.10.2008) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு புனித மடுத்தினார் குருமடத்திலும் அருள் ஆச்சிரமத்திலும் தவசிகுளம் காணிக்கை மாதா கோயிலிலும் பூசைகள் நடைபெறும். அன்னாரின் இல்லத்தில் மதியபோசனம் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
வடக்கு வீதி, மிருசுவில்.

குடும்பத்தினர்.

## ஓய்வுபெற்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

கோப்பாய், உரும்பிராய், அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வை எதிர்வரும் 19 ஆம் திகதி நடத்தவுள்ளனர். இப்பிரதேச ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தமது விவரங்களை கோப்பாய் மகா வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராஜா, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அதிபர் மு.விக்னேஸ்வரன், அச்சுவேலி மகாவித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியம் ஆகியோரிடம் பதிவுசெய்யுமாறு லயன்ஸ் கழகத்தினர் கேட்டுள்ளனர். (204)

## பிரத்தியேக வகுப்புக்கள் இடமாற்றம்

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவை முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி சிறப்புத்தரம் மற்றும் வகுப்பு 1 ஆகிய பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புகள் இடமாற்றம் செய்யப்படவுள்ளன.

நல்லூர் இந்து தமிழ்ப்பெண்கள் பாடசாலையில்நடைபெற்ற இந்த வகுப்புகள் இடவசதியின்மை காரணத்தினால் இன்று சனிக்கிழமை முதல் இந்துமகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(204)

## பாராட்டு வாழ்த்தும், பிறந்தநாள் வாழ்த்தும்

இன்று தனது 10ஆவது பிறந்தநாளை கொண்டாடும் குமாரகுலசிங்கம் செல்வவதனா தம்பதியினரின் செல்வப்புதல்வனும், யா/வட்டு மத்தியகல்லூரி மாணவனுமான

**குயின்சன்**

2008ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 128 புள்ளிகளைப் பெற்று சித்தியடைய உறுதுணையாக இருந்த அதிபர் ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன், செல்வன் குயின்சன் மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை.

மாமாமார்,
(79142) சுதன் சித்தப்பா (லண்டன்), அன்ரா.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் லான்ட் ஓ லேக்ஸ் பாற்பொருள் அபிவிருத்தி லங்கா நிறுவனமும் இணைந்து நடத்தும்

## யாழ்.கோவின் பாற்பொருள் தயாரிப்புகளின் மீள் அறிமுக நிகழ்வு

கூட்டுறவே நாட்டுயர்வு    எமது பொருளாதாரம் எமது கையில்

நேரம் மு.ப. 10 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை

| திகதி | நடைபெறும் இடங்கள் |
|---|---|
| 12.10.2008 | கல்வியங்காடு சந்தைக்கு முன்பாக, திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில், உரும்பிராய் மருதனார்மடம் வீதி. |
| 15.10.2008 | அச்சுவேலி பேருந்து நிலைய வளாகம், நீர்வேலி,புன்னாலைக்கட்டுவன் வீதி, கோப்பாய் கந்தசாமி கோயிலடி. |
| 17.10.2008 | வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு. |

வாருங்கள்! வாங்குங்கள்! பயன்பெறுங்கள்!

**யாழ்கோவின் பாற்பொருள்களைச் சுவையுங்கள்!**
**பரிசுகளை வெல்லுங்கள்....!!!**

தரமான ஊட்டம் நிறைந்த உள்ளூர் பால் உற்பத்திகளை வாங்கி அருந்தி ஆரோக்கியமாக வாழ்வோம்!
மாவட்ட கால்நடைப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம்!!

(79159)

JSAC

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் (JSAC)
நடத்தும்

## "இதயத்தால் சிந்திப்போம்"

## சர்வதேச சமாதான தினவிழா- 2008

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம்: நாளை (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி

பிரதம விருந்தினர்
திரு.இ.த.விக்னராஜா
(மேல் நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம்)

### நிகழ்வுகளின் பார்வையில்


* சிறப்புச் சொல்லாற்றுகை
திரு.க.தேவராஜா
(பீடாதிபதி, முகாமைக் கற்கைகள் வணிக பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
* தேடல் அரங்கம்
* கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும்
வாத்திய பிருந்தா இசை நிகழ்வு
* யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களும், நல்லைக் கலாமந்திர் மாணவர்களும் இணைந்து வழங்கும்
"சீதாபஹர்ணம்" நாட்டிய நாடகம்
* JSAC நிறுவனம் வழங்கும்
"கனவு மெய்ப்பட வேண்டும்" நாடகம்

**சமாதான ஆர்வலர்கள், விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
24 - 01 - 1938

மறைவு
11 - 09 - 2008



**அமரர் வெள்ளைக்குட்டி கந்தையா**
(ஓய்வுபெற்ற தபால் அதிபர், சுன்னாகம்)

கடந்த 11.09.2008 வியாழக்கிழமை எமது குடும்ப விளக்கு சிவபதம் அடைந்த் செய்தி அறிந்து இறுதிக்கிரியைகளில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் செய்தி தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (11.10.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்"

மஞ்சத்தடி வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில். (சி/55540)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'பொங்கு தமிழர்க்கு இன்னல் நேர்ந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு' என்ற
# பாவேந்தரின் புரட்சி வரியை செயலில் காட்டிய கலைஞர்
# நோர்வேத் தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் பாராட்டு!

சென்னை, ஒக்.11

ஈழத் தமிழினத்திற்கெதிராக கொடிய இன் அழிப்புப் போரைக் கட்ட விழ்த்துவிட்டு - அரக்கத்தனமான - காட்டுமிராண்டித்தனமாக - விலங்குகளை விடக் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்திவரும் இலங்கைச் சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிராக தாங்கள் நெஞ்சுரத்துடன் குரல்கொடுத்துள்ளமை எமது இதயங்களில் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளதுடன் -

''பொங்கு தமிழர்க்கு இன்னல் நேர்ந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு'' என்ற பாவேந்தரின் புரட்சி மொழியை உங்கள் செயலில் காண்கிறோம்.

- இவ்வாறு நோர்வேத் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் நோர்வே தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஈழத் தமிழர் மீது இலங்கை அரசு, அரக்கத்தனமான முறையில் குண்டுகளை வீசி கொன்றுவருகின்றது. இதற்கு எதிராக தாங்கள் நெஞ்சுரத்துடன் குரல் கொடுத்துள்ளமை எமது இதயங்களில் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது.

கட்சி அரசியல் வேறுபாடின்றி தமிழகத்தின் அனைத்து சக்திகளும் தமிழீழ மக்களின் உயிர் காப்பிற்கும் உரிமை மீட்பிற்கும் ஒன்றுபட்டுக் குரலெழுப்ப வேண்டுமென்ற தங்களின் அழைப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயல் முன்னெடுப்பாகும்.

''பொங்கு தமிழர்க்கு இன்னல் நேர்ந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு'' என்ற பாவேந்தரின் புரட்சி மொழியை உங்கள் செயலில் காண்கிறோம். தமிழீழ மக்களின் காயங்களுக்கான ஒத்தடமாகவும், நாளைய விடியலுக்கான நம்பிக்கை ஒளியாகவும் அதனைக் காண்கிறோம்.

தமிழினத்தின் வேரறுக்கும் நோக்குடன் செயற்பட்டு வரும் சிங்களப் பேரினவாதமானது, அறுபது ஆண்டு கால இன அழிப்பின் உச்சமாக இன்று எமது மக்களின் குரல் வளைகளை நெரித்து நிற்கின்றது. குண்டு மழைக்குள்ளும் குருதி மழைக்குள்ளும், ஊருராய் அலைகின்ற அவலங்களுக்குள்ளும் தோய்ந்துள்ளது எமது மக்களின் இன்றைய வாழ்க்கை.

நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட காலப் பகுதியிலும் கூட அரசியல் தீர்வுக்கான அனைத்துக் கதவுகளையும் இலங்கை அரசு இறுக மூடியது.

தமிழர்களுக்கான மனிதாபிமான உதவிகளையே கங்கணங் கட்டி நின்று தடுக்கும் இலங்கைப் பெருந்தேசியவாத ஆட்சியானது, எங்ஙணம் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை ஏற்றுக்கொள்ளும் என்பது வரலாற்றுப் பட்டறிவினூடாக தமிழீழ மக்களுக்கு இயல்பாக எழுகின்ற கேள்வியாகும்.

இந்த ஆண்டு ஜனவரியில் இலங்கை அரசு, ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகியதோடு, இருதரப்பிற்கு மத்தியில் போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கென ஆறு ஆண்டுகளாக இலங்கைத் தீவில் நிலைகொண்டிருந்த ஸ்கன்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களையும் வெளியேற்றியது.

இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து ஐ.நா. உட்பட்ட அனைத்துலக அரச சார்பற்ற உதவி நிறுவனங்களும் வெளியேற்றப்பட்டுள்ளன.

தமிழர் தாயகப் பகுதிகளில் அனைத்துலக சமூகத்தின் பிரசன்னத்தை இல்லாமற் செய்வதனூடாக, தமிழின அழிப்பைத் தீவிரப்படுத்துவதே சிங்கள அரசின் உள்நோக்கமென்பது வெள்ளிடை மலை.

தமிழீழ மக்கள் உலகில் நாதியற்ற இனம் அல்ல. தாய்த் தமிழகத்தில் எமது தொப்புள் கொடி உறவுகள் ஆறு கோடி தமிழர்கள் உள்ளனர். எமக்காக உரத்துக் குரல் கொடுக்கும் உறுதியோடு இன்று உணர்வலைகளை எழுப்பியுள்ள தமிழக உறவுகளுக்கு எமது பெருநன்றியை பகிர்ந்து கொள்கின்றோம்.

இந்திய அரசியல் விரிதளத்தில் நிராகரிக்க முடியாத முக்கியத்துவமுடைய மாநிலமாக தமிழகம் விளங்குகின்றது என்பதை நாம் அறிவோம்.

எனவே,

- இந்திய அரசு, இலங்கைப் பேரினவாத அரசிற்கு வழங்கி வரும் படைய உதவிகளை நிறுத்த வேண்டும்.

- இலங்கை அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.

- தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பான இந்திய அரசின் கொள்கை நிலைப்பாட்டில் சாதகமான மாற்றம் நிகழ வேண்டும்.

- தமிழ் மக்களின் நியாயமான வாழ்வுரிமைக் கோரிக்கைகளுக்கு இந்தியப் பேரரசு ஆதரவளிக்க வேண்டும்.

இதற்கான அழுத்தங்களைத் தாங்கள் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென உரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

தமிழீழ மக்களின் உரிமைகளுக்கு ஆதரவாக உங்கள் ஆட்சியில் தமிழகம் கண்டுள்ள இந்த எழுச்சி, அரசியல் தளத்தில் தொடர் தாக்கங்களை விளைவிக்கவல்ல செயற்பாடுகளுக்கு இட்டுச்செல்லப்பட வேண்டுமென்பதே வாழ்வுரிமைக்காகப் போராடும் ஒட்டுமொத்த தமிழீழ மக்களின் பேரவா என்பதையும் இங்கு பதிவுசெய்து கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நவராத்திரி விழாவில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக வீணை வழிபாட்டு இசை நிகழ்ச்சி நடைபெற்றபோது.....

# இலங்கைக் கடற்படை சுத்தியல், கட்டைகளால் அடித்து எங்களைச் சித்திரவதைப்படுத்தியது!!

## தாக்குதலுக்குள்ளான தமிழக மீனவர் தெரிவிப்பு

இராமேஸ்வரம், ஒக். 11

இலங்கைக் கடற்படையினர் நடுக்கடலில் எங்கள் படகுகளைச் சுற்றிவளைத்து நைலோன் கயிறு மற்றும் சுத்தியல், உருட்டுக் கட்டைகள் போன்றவற்றால் கண்மூடித்தனமாக - அரக்கத்தனமாக எங்களை அடித்து உதைத்துச் சித்திரவதை செய்தனர். கத்தியைக் காட்டி மிரட்டி, இலங்கைக் கடற்பகுதிக்குள் வரக்கூடாது என்று எச்சரித்து விரட்டியடித்தனர்.

- இவ்வாறு இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்குள்ளான மீனவர் ஒருவர் தெரிவித்துள்ளார் என தமிழக நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இராமேஸ்வரத்திலிருந்து, 400இற்கும் மேற்பட்ட படகுகளில், கடந்த புதனன்று மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். நடுக்கடலில் மீனவர்களின் படகுகளைச் சோதனையிட்ட இந்தியக் கடற்படையினர், ''இலங்கையில் சண்டை தீவிரமடைந்துள்ளதால் எல்லை தாண்டிச் செல்லக்கூடாது'' என்று மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.



இதையடுத்து, கச்சதீவுக்கருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அவ்வழியாக ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர், மீனவர்களின் வலைகளை வெட்டிச் சேதப்படுத்தினர். படகில் இருந்த ஜி.பி.எஸ். கருவிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளைக் கடலில் தூக்கி வீசினர். நைலான் கயிற்றால் மீனவர்களை அடித்துச் சித்திரவதைசெய்து அங்கிருந்து விரட்டியடித்தனர். காயமடைந்த மீனவர்கள், உயிர் தப்பி நேற்றுமுன்தினம் அதிகாலை கரைதிரும்பினர்.

பாதிக்கப்பட்ட மீனவர் வைரவன் (வயது - 60) கூறியவை வருமாறு:-

கச்சதீவுப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தோம். அப்போது, தலைமன்னார் பகுதியிலிருந்து இரண்டு இலங்கைக் கடற்படைக் கப்பல்களும், வாடப்புரம் முனையிலிருந்து இரண்டு இலங்கைக் கடற்படைக் கப்பல்களும் வந்தன. எங்களைச் சுற்றி வளைத்த அவர்கள், எங்கள் பொருட்களைச் சேதப்படுத்தி, நைலான் கயிறு மற்றும் சுத்தியல் போன்றவற்றால் எங்களை அடித்துச் சித்திரவதை செய்தனர்.

கத்தியைக் காட்டி மிரட்டி, இலங்கைக் கடற்பகுதிக்குள் வரக்கூடாது என்று எச்சரித்து விரட்டியடித்தனர். உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில், கச்சத்தீவு கடல்பகுதியில் மீன்பிடிப்பது இனிமேல் சாத்தியமில்லை- என்றார்.

# ஈழத் தமிழரின் வாழ்வுரிமையைப் பாதுகாக்க அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்

## புலிகளை ஆதரிக்கும் ம.தி.மு.கவை தடை செய்யவும் கோருகிறார் அமைச்சர் நாராயணசாமி

புதுச்சேரி, ஒக்.11

இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களிலிருந்து ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க அனைத்து அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ், தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகள் இடையே ஒருமித்த கருத்துகள் உள்ளன. ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை.

- இவ்வாறு மத்திய அமைச்சர் நாராயணசாமி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் வைகோ மீது நடவடிக்கை எடுத்து ம.தி.மு.கவைத் தடைசெய்யவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

புதுவையில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இவற்றைக் கூறினார். அங்கு மேலும் அவர் கூறியவை வருமாறு:-

அப்பாவி ஈழத் தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் சுட்டு கொல்லப்பட்டபோது தமிழக முதலமைச்சர் கலைஞர் பிரதமரைத் தொடர்பு கொண்டார். பிரதமரும் தனது பாதுகாப்பு ஆலோசகர் மூலமாக டில்லியில் உள்ள இலங்கைத் தூதரிடம் தனது கண்டனத்தை தெரிவித்தார்.

ஈழத் தமிழர்கள் சித்திரவதைக் குள்ளாவதை மத்திய - மாநில அரசுகள் பார்த்து கொண்டு இருக்க முடியாது. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் தீவிரவாத இயக்கம்தான். அதோடு இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாகும்.

தமிழக, புதுவை உள்ளிட்ட பிற மாநிலங்களில் விடுதலைப் புலிகள் ஊடுருவதைத் தடுக்க மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க

# ஐதராபாத்தில் பிச்சைக்காரரின் ஆண்டு வருமானம் ரூ.15 கோடி

ஐதராபாத், ஒக்.11

ஐதராபாத் நகரில் 10 ஆயிரத்து 466 பிச்சைக்காரர்கள் உள்ளனர் எனவும், இவர்களது ஆண்டு வருமானம் 15 கோடி ரூபாவுக்கும் அதிகமாக இருக்கிறது எனவும் 'ஐதராபாத் கவுன்ஸில் ஒவ் ஹிமன் வெல்பேர்' என்ற அமைப்பு நடத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து இந்த அமைப்பின் இயக்குநர் முகமது ரபியுத்தீன் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

'ஐதராபாத்தில், 48.6 சதவீத பிச்சைக்காரர்களின் மாத வருமானம் 5,082 ரூபா. வழிபாட்டுத் தலங்கள் அருகில் பிச்சை எடுப்பவர்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது. மொத்த பிச்சைக்காரர்களில் 8,227 பேர் இந்துக்கள், 1,454 பேர் முஸ்லிம்கள், 473 பேர் கிறிஸ்தவர்கள். இளம் வயது பிச்சைக்காரப் பெண்கள் அதிகளவில் பாலியல் கொடுமைக்கு ஆளாகிறார்கள்' - என்றார்.

# 'மரியாதை' படம் விஜயகாந்துக்கு தேசிய விருதைப் பெற்றுத் தரும்

## இயக்குநர் விக்ரமன் தெரிவிப்பு

சென்னை, ஒக்.11

இரு வேடங்களில் விஜயகாந்த் நடிக்கும் 'மரியாதை' படம் நிச்சயம் அவருக்கு தேசிய விருது பெற்றுத்தரும் - என்று அந்தப் படத்தின் இயக்குநர் விக்ரமன் தெரிவித்தார்.

அம்மா கிரியேஷன்ஸ் தயாரிப்பில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் ''மரியாதை'. இதில் மீனா, மீரா ஜாஸ்மின், அம்பிகா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள். இந்தப் படத்தின் தொடக்க விழா சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் விஜயகாந்த் பேசியவை வருமாறு-

இயக்குநர் விக்ரமன் என்னை வைத்து 'வானைத்தைப் போல' படத்தை இயக்கியுள்ளார். அது மிகப்பெரிய வெற்றிப் படமாக அமைந்தது. 8 ஆண்டுகளுக்குப் பிறகு நானும் விக்ரமனும் 'மரியாதை' படத்தின் மூலம் மீண்டும் இணைந்துள்ளோம்

இதில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தந்தை - மகன் என இரண்டு வேடங்களில் நடிக்கிறேன். 'வானத்தைப் போல' படத்தை விட மிக அற்புதமான கதையம்சம் இந்தப் படத்தில் உள்ளது.

இயக்குநர் விக்ரமன் பேசியவை வருமாறு-

'மரியாதை' படத்தில் நிச்சயம் விஜயகாந்துக்கு தேசிய விருது கிடைக்கும்.- என்றார்.

# ஈழத் தமிழரைப் பாதுகாக்கக் கோரி தந்தியனுப்ப அழைக்கின்றார் திருமா

ஈழத் தமிழர்கள் மீதான இலங்கை இராணுவத்தின் அரக்கத்தனமான - மிலேச்சத்தனமான- தாக்குதல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த இந்திய அரசு தலையிட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு விடுதலைச் சிறுத்தையினர் தந்திகள் அனுப்ப வேண்டும் என்று அக்கட்சித் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

எப்போதுமில்லாத வகையில் தமிழீழத் தமிழர்களை பூண்டோடு அழித்தொழிக்கும் நோக்கத்தோடு சிங்கள அரசு தனது இராணுவத்தைத் தயார்ப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், ஈழத்தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ள இலங்கை அரசுக்கு, இந்திய அரசு தகுந்த அழுத்தங்களைக் கொடுத்து இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமருக்கு தந்திகள் அனுப்பும்படி தமிழக முதல்வர் அறிவித்ததை விடுதலைச் சிறுத்தைகளும் வரவேற்றுப் பாராட்டியதுடன் விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலும் தந்திகள் அனுப்பப்படும் என்று அறிவித்திருந்தோம்.

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து விடுதலைச் சிறுத்தை ஆதரவாளர்களும் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு தந்திகள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் -என்று திருமாவளவன் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த தின வாழ்த்து



125, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலியைச் சேர்ந்த
தியாகராஜா (சுதா) - குமுதினி
தம்பதியரின்
செல்வப் புதல்விகள்

**ஷரண்யா, ஷங்கவி**

ஆகிய இரட்டைச்
சகோதரிகள் தங்கள் முதலாவது பிறந்த தினத்தை இன்று (11.10.2008) சனிக்கிழமை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, அம்மையா, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரா, சித்தப்பா, அத்தை, மாமாமார், பூட்டன், பூட்டி ஆகியோர் நயினை நாகபூசணி அருள்பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

*இல: 125, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்
அ.டிக்ஷன் (மாமா)

# தென்னிந்திய திருச்சபை - இலங்கை
# யாழ். ஆதீனம்
## 61 ஆவது வருடாந்த ஆதீனப் பெருவிழா - 2008

**காலம் - இன்று (11.10.2008) சனிக்கிழமை**
நேரம் - காலை 8.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

8.00 மணி - நன்றி செலுத்தும் வழிபாடும், குருத்துவ அபிஷேகமும்
**நடத்துநர் :** அதி வணக்கத்திற்குரிய பேரருட் கலாநிதி
**D.S. தியாகராஜா** *(பேராயர், தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம்)*

**உதவிக்குரு அபிஷேகம் பெறுவோர்:-**
1. திரு.ஜெயப்பிரகாசம் தாவீது *(ஊழியர், தேவகிராமம் திருச்சபை)*
2. திரு. கணேசன் றொபின்சன் சிவபாலன் *(ஹட்டன் திருச்சபை)*

**குரு அபிஷேகம் பெறுவோர் :**
1. வண Dr. **ராஜசீலன் டரன்ஸ் மரியோ அன்டோனியோ** *(இணைப்பாளர், சுகவாழ்வகம், தென்னிந்திய திருச்சபை)*
2. வண. **உதயணன் சர்மா** *(ஊழியர், அக்கரைப்பற்று)*

அருளுரையாளர் : வண.திருமதி **அன்ஜலா தம்பியப்பா** *(புனித ஜோர்ச் கிழக்கு சென்.கில்டா மெல்பேன் ஐக்கிய திருச்சபை, ஆஸ்திரேலியா)*

11.30 மணிக்கு -**கிறிஸ்தவ கலை பண்பாட்டு நிகழ்வுகள்**
**ஒழுங்கமைப்பு :** *கிறிஸ்தவ கலை கலாசார பண்பாட்டு மையம் - தென்னிந்திய திருச்சபை*

1 மணிக்கு - **ஐக்கிய மதிய உணவு**
**(மண்டபம் லீவைஸ் போல்டிங்,-ஆண்கள் இல்லம்)**

"எழும்பி பிரகாசி உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன் மேல் உதித்தது"
*(ஏசாயா 60:1)*

உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.ஆதீனம்
வட்டுக்கோட்டை.

வண.இ.ராஜ்குமார்
காரியதரிசி.

உ
சிவமயம்
## சைவக்குருமணிகள் மிஷன்
208, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர்.
www.saivakurumanikal.org

### சைவக்கிரியையியல் செயலமர்வு

இடம் : சைவக்குருமார் அர்ச்சகர் சபை மண்டபம், முத்துமாரி அம்மன் கோவிலடி, திருநெல்வேலி.
காலம் : 11.10.2008 (இன்று) சனிக்கிழமை, 12.10.2008 ஞாயிற்றுக்கிழமை } மாலை 2.00 மணி
விடயம் : கடஸ்தாபனம்
வளவாளர்: சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள் தலைவர், சைவக்குருமணிகள் மிஷன்.

செயலாளர்.

## ஆசிரியர் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ். பாலர் கல்விக் கழகத்தினர் நடத்தும் ஆசிரியர் கௌரவிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் தலைமையில் நிகழ்வு இடம் பெறும்.

(202)

# வாழ்த்துகின்றோம்



2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு.உமாசுதசர்மா-ரஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வி
**உ.மாதனி (125 புள்ளிகள்)**
அவர்கள் மேன்மேலும் சிறப்புற வழத்துகின்றோம்.

ஆலய சிவனடியார்கள்
மதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்-கைதடி.

## சொற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.திருமதி அருஞ்சோதி விஜயா தம்பதியரின்**
செல்வப் புதல்வி **அ.பானுஜா**
யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையில் 2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 115 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்மமையையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதோடு இவரின் உயர்விற்கு வழிகாட்டிய பாடசாலை அதிபரையும், ஆசிரியரையும் பிரத்தியேக வகுப்புகளில் கற்பித்த ஆசிரியை செல்வி பொ.சசிகலா அவர்களையும் சித்தங்கேணி பாரதி கல்வி நிறுவன ஆசிரியரையும் வாழ்த்தி நன்றிகளை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் இவர் கல்வியில் முன்னேற இறையருள் வேண்டுகின்றோம்.

கலைவாணி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

வாழ்த்துவோர்:-
அப்பா, அம்மா, தங்கை, பெரியப்பா, மாமா குடும்பம், சித்திமார் குடும்பம்.

## ஊரெழுவில் தீர்த்தத் தடாகம்

கோப்பாய்,ஒக்.11

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிய தீர்த்த தடாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

அப்பிரதேச மக்களின் நிதிப் பங்களிப்புடனும் ஆலய பரிபாலன சபையின் நிதி உதவியுடனும் நவீன கலாசார மண்டபமும் ஆலய வீதியில் அமைக்கப்படுகிறது.

இதேவேளை, ஆலய வீதியைச் சுற்றி 50இற்கு மேற்பட்ட பயன்தரு மரக் கன்றுகளும் அண்மையில் ஆலய பரிபாலன சபையாரால் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
04 . 01 . 1983



விண்ணில்
11 . 09 . 2008

**ராஜன் இம்மானுவேல் தேவராஜன் லம்பட்**
**(4 ஆம் வருட முகாமைத்துவ வணிகபீட மாணவன்)**

"ஜீவியத்தில் நேசித்தவரை மரணத்திலும் மறவாதிருப்பாயாக"

ஆனந்தகுமாரசாமி விடுதி,
யாழ்.பல்கலைக்கழகம். (79147)

மாணவர்கள்.

# மரண அறிவித்தல்

## தாவடியூர் பண்டிதர் சிவகுரு ஆறுமுகம்



(இளைப்பாறிய அதிபர்-நாமகள் வித்தியாசாலை, கொக்குவில்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு ஆறுமுகம் அவர்கள் (09.10.2008) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு-தங்கமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற இராசம்மாவின் கணவரும் ஜெயலக்ஷ்மி, ஜெயபாலச்சந்திரன் (இளைப்பாறிய முகாமையாளர்- காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்), ஜெயக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தன்(இளைப்பாறிய ஆலை முகாமையாளர்-காகித ஆலை வாழைச்சேனை), உஷா, பத்மலோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அனித்தா, சுமித்திரா, லாவண்யா, சுவர்ணா, சுதர்சனா, சமித்தா, நிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக 1.30 மணியளவில் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

41/4-1/1, TERREANCE AVENUE,
MT.LAVINIA
TP-0115744816, 0777870942.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.11

குருநகர் சிக்ஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை நடைபெற வுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணி களின் விவரம் வருமாறு:-

* உதயசூரியன் வி.க.எதிர் கேரூசி வி.க.
* தூய பியோ வி.க.எதிர் கோல் ஸ்ரார் வி.க.
* சிறிமுருகன் வி.க.எதிர் யுத்கார்மேல் வி.க.
* மரியன்னை வி.க.எதிர் பாஷையூர் வி.க.
* அலைகள் வி.க.எதிர் ஏசியன் வி.க.
* ஜேம்ஸ் வி.க.எதிர் சிஸ்ரார் வி.க.
* மாட்டீன் கிங்ஸ் வி.க.எதிர் லெவின் ஸ்ரார் வி.க.
* ஹற்றன் நஷனல் வங்கி வி.க.எதிர் கார்மேல் போய்ஸ் வி.க.
* திருநெல்வேலி வி.க.எதிர் சென்.றோக் வி.க.
* ஜங் பைட்டர்ஸ் வி.க.எதிர் சென். பீற்றர் வி.க.

(202)

## யாழ். பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர் பதவி வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.பல்கலைக்கழகத்தில் நீண்ட கால மாக நிரப்பப்படாதிருந்த கல்விசாரா ஊழி யர்களின் பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்கள் உடனடியாக நியமிக் கப்பட வேண்டும்.

இவ்வாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீண்டகாலமாக யாழ்.பல்கலைக்கழ கத்தில் கல்விசாரா ஊழியர்களின் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. இப் பிரச்சினையை முன்னுரிமைப்படுத்தி துணைவேந்தர், பேரவை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர், உயர்கல்வி அமைச்சர், திறை சேரியின் செயலாளர் ஆகியோருடன் சங்கத்தின் தலைவர் ச.க.தனேந்திரன் தாம் பேச்சு நடத்தவுள்ளார் எனத் தெரிவித்தார்.

வட பகுதியில் இயங்கும் ஏனைய திணைக்களங்களின் பதவி வெற்றிடங் களுக்கு நியமனம் வழங்கப்படுவது போலவே கல்விசாரா ஊழியர்களின் நியமனத்தையும் வழங்குமாறு அவர் கோரிக்கை விடுக்க வுள்ளார்.

பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (202)

## 'இதயத்தால் சிந்திப்போம்' சமாதான விழா

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.சமூக செயற்பாட்டுமையம் நடத் தும்'இதயத்தால் சிந்திப்போம்' சமாதான விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண் டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மேல் நீதி மன்ற நீதிபதி இ.த.விக்னராஜா பிரதம விருந்தினராகவும், இலங்கை திருச்சபையின் யாழ் முதல்வர் வண.பிதா எஸ்.பி. நேசகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக முகாமைக் கற்கை வணிக பீடாதிபதி க.தேவராஜா சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். சமாதானத்தை வேண்டிக் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (204)

## வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தில் பாலுணவுகள் விற்பனை

வடமராட்சி,ஒக்.11

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பொது மக்களின் வசதி கருதி கொழுப்பு நீக்கப்பட்ட பாலுணவு களையும் தயாரித்து விற்பனை செய்து வருகின்றது.

இச் சங்கத்தால் மந்திகை அரசினர் கால் நடை வைத்திய நிலையத்துக்கு அருகில் நிறுவப்பட்டுள்ள பால்சாலையில் கொழுப்பு நீக்கப்பட்ட பாலுணவுகள் விற்பனை செய் யப்படுகின்றன.

பால், தயிர் மற்றும் பாலில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்களே இவ்வாறு கொழுப்பு நீக்கி விற்பனை செய்யப்படு கின்றன. (202-236)





## நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்களுக்கு சிறுமுயற்சித் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.11

உரும்பிராய் இந்துக் கல்லூரி நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சிறுமுயற்சி வேலைத்திட்டங்களை வலி. கிழக்கு பிரதேச செயலகம் மேற்கொண் டுள்ளது.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் 11 லட்சம் ரூபா செல வில் இந்த வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களின் போது தொழில் முயற்சிக்கான உபகரணங்களும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (202-72)



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் அதிக விற்பனையை மேற்கொண்ட பணியா ளர்களுக்கு ஊக்குவிப்பு பணப்பரிசு வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் ப.கிரிதரன் கிளை முகாமையாளர் ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் அருகில் சங்க இயக்குநர் எஸ்.டொமினிக், பொது முகாமையாளர் து.மனோகரன், கணக்காளர் எம்.குமணதாஸ் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்திலும் சங்கப் பணியாளர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்-குமார்)

## அறநெறிப் போட்டிகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.11

தென்மராட்சிகல்விவலயத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான அற நெறிப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரை யான மாணவர்களுக்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி ஆகியவற்றில் நடத்தப்படவிருந்த போட்டி கள் பிற்போடப்பட்டுள்ளன எனவும் போட்டி கள் நடைபெறும் திகதி பற்றிப் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித் துள்ளார். (202-207)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைக்கு பட்டதாரி ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, ஒக்.11

பல்கலைக்கழங்களில் உள்வாரியாக ''பட்டப்பின் கல்வி டிப்ளோமா'' பாட நெறியைப் பயில்வதற்குப் பட்டதாரி ஆசிரி யர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஒரு வருடக் கற்கைநெறியைப் பயில்வதற்குத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ஒரு வருட காலத்துக்குப் படிப்பு லீவு கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்படும் என்றும் பயிற்சிநெறிக்கு பட்டதாரி ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பன மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். மேற்படி பாடநெறி யாழ்ப்பாணம், பேராதனை, கொழும்பு பல் கலைக்கழகங்களில் நடைபெறவுள்ளது.

மேலதிக விவரங்களை 2008.10.10 ஆம் திகதிய வர்த்தக மானியில் பார்வையி டலாம். (202-11)

## 'சோஆ' நிறுவனத்தின் நிதியுதவியுடன் நவ்க்கிரியில் 4 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.11

புத்தூர் கமநல சேவைகள் பிரிவில் உள்ள நவக்கிரி கிராமத்தில் பல ஆண்டு களாகத் திருத்தப்படாத நிலையில் இருந்த 4 விவசாய வீதிகள் 'சோஆ' நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப் பட்டுள்ளன.

10 லட்சத்து 53 ஆயிரத்து 320 ரூபா செலவில் புத்தூர் கமநல சேவைகள் நிலை யம், நவக்கிரி விவாசாய சம்மேளனம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக் களம் ஆகியவைகள் இணைந்து இந்தத் திருத்தப் பணிகளை மேற்கொண்டன.

உத்திரை வீதி, இந்திராணி வீதி, அண் ணமார் வீதி, வடக்குவெளி வீதி ஆகிய வையே புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீதிகள் புனரமைக்கப்பட்டதன் மூலம் அப்பகுதி விவசாயிகள் மற்றும் கிராம மக்களின் போக்குவரத்துக்களில் காணப் பட்ட சிரமங்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

## தொலைக்காட்சிகளில் வரும் தொடர் நாடகங்கள் குடும்ப, கலாசார விழுமியங்களைப் பாதிக்கின்றன

### மூதறிஞர் சிற்பி கருத்து



கோப்பாய், ஒக்.11

தொலைக்காட்சிகளில் வரும் 'மெகா 'தொடர் கள் பெரும் குடும்பச் சிதைவை ஏற்படுத்தி வரு வதுடன், கலாசார விழுமி யங்களையும் ஆட்டம் காண வைக்கின்றன. இவ்வாறு தெரிவித் தார் மூதறிஞர் சிவசரவணபவன்.

ஊரெழு கணேசா வித்தியாசாலையில் ஊரெழு வேலனின் நூல் வெளியீட்டு விழா அண்மையில் பாடசாலை அதிபர் சி. திரிகரன் தலைமையில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு தொடர்ந்து பேசுகையில் சிவசரவணபவன் (சிற்பி) கூறியதாவது:-

ஒருவன் வாழ்க்கையில் நேர்மை உடையவனாக இருந்தால் 'இறைவனை நினைத்து எல்லாக் காரியங்களையும் செய்தால்' இறையருள் கிடைத்துவிடும். ஆனால் இவ்வாறு வரும் சக்தியைப் பணம் பண்ணும் ஒரு வழியாகப் பயன்படுத்து வதால் அது பயனற்றுப் போய்விடுகிறது.

ஆத்திசூடி, திருக்குறள் போன்ற நன் நூல்களை சிறுவர்களுக்கு ஐயம் திரிபறச் சொல்லிக் கொடுக்கவேண்டும். இத னால் அவர்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைய வழியேற்படும். இன்று இவற் றினைத் தேர்விற்காக மட்டும் கற்று விட்டு மறந்து போய்விடுகிறார்கள். அத்துடன் ஏனைய நல்ல பல நூல்களையும் வாசிக் கும் பழக்கம் அருகிவிட்டது.

இதற்குப் பிரதான காரணங்களில் ஒன்று தொலைக்காட்சிப் பொழுது போக்காகும்.

ஆனால் வெளிநாடுகளைப் பொறுத்த வரையில் தொலைக்காட்சியை அறிமுகம் செய்த பல நாடுகளில் கூட வாசிப்புப் பழக்கம் மென்மேலும் வளர்ந்து வருவதாகத் தரவு கள் தெரிவிப்பதுடன், நூல் விற்பனையும் உச்ச அளவில் உள்ளதாக அறிய முடிகிறது. அங்குள்ளவர்கள் தொலைக்காட்சியைப் பொழுது போக்குடன் அறிவு சார்ந்த விடயங் களிற்குப் பயன்படுத்துவது சிறப்பம்ச மாகும்.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற் றோர்களும் வாசிப்புப் பழக்கம் மிக்கவர்க ளாக இருப்பதன் மூலமே அவர்களின் சிந் தனை ஆற்றலை மேலும் வளர்க்க முடி யும்.

அந்த வகையில் ஊரெழு வேலன் தனது நெஞ்சறிய (மனமறிய) தனது நல் அனுபவங்களை வெளியீட்டு ஏனையவர் களுக்கும் தெரிய வைப்பது நல்ல பணி யாகும். அதற்கமைய தனது வாழ் வியல் அனுபவத்தை கதை வடிவில் நூலுருவில் வெளியிட்டமை சிறப்பம்சமாகும்- என்றார்.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் சி.நடராஜா, ஊரெழு கிராம அலுவலர் [illegible] உட்பட பலர் உரையாற் றினர். (202-72)

## தீவகம் தெற்கு பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.11

தீவகம் தெற்கு(வேலணை) பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு வேலணை துறையூர் முருகன் ஆலய கலாசார மண்டபத்தில் இந்தக் கௌரவிப்பு விழா நடைபெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட சன சமூக அபிவிருத்தி அதிகாரி சி.பகிரதன் மேற்கொண்டுள்ளார்.

முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் க. விக்னேஸ்வரன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்விற்குப் பிரதம விருந் தினராக வேலணைப் பிரதேசசபை செய லாளர் கை.மகேந்திரலிங்கமும் சிறப்பு விருந்தினராக தென்னிந்தியத் திருச்சபை யின் யாழ் ஆதீனகுருவண.பிதாசெபஸ்ரியன் அன்ரன், வேலணை மத்திய கல்லூரி அதிபர் பொ.அருணகிரிநாதன், வேலணை ப.நோ. கூ.சங்க பொது முகாமையாளர் ச.விநாயக மூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்வர். (202-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி சிவகாமி மகாதேவன்
(இளைப்பாறிய தபாலதிபர்- நயினாதீவு)

எமதருமை அம்மாவே! எமக்கு நல்வழி காட்டிய நாயகியே!
அன்பின் அடைக்கலமே! அறிவின் பெருந்தகையே!
பண்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே!
கனிவான முகமும் எதற்கும் கலங்காத நெஞ்சமும் கொண்டவரே!
ஏன்தான் கலங்கினீரோ! எங்குதான் சென்றீரோ!
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு!

கடந்த 11.09.2008 அன்று சிவபதமடைந்த எம்து குடும்பத் தலைவியின் மரணச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் தொலைபேசி, தொலைநகல், தந்தி ஊடாக அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் மேலும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.10.2008) சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்தக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*'தஞ்சமென அடைந்தேன் தாயே உன் சேய் நான்'*

**அழைப்புக் கிடைக்காத அன்பு நெஞ்சங்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தவறாது வருகைதந்து நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.**

என்றும் நினைவுடன்:சி.மகாதேவன் (கணவர்),
ம.சத்தியரூபன் (மகன்)
(கணக்காளர், உரிமையாளர், Director of M.S.R.Accounting & Tax Consultancy Ltd, London.)
மற்றும் குடும்பத்தினர்.

**5 ஆம்-வட்டாரம்,**
**நயினாதீவு.**
**தொ.பே: 0775291737**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



துன்னாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கோட்டப்பளை- பிட்டிதூவு வீதி வேள்ட்விசன் நிறுவனத்தின் நிதி உதவியுடன் துன்னாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் புனரமைப்புச் செய்யப்பட்டது. புனரமைக்கப்பட்ட வீதியை கரவெட்டிப் பிரதேச சபைச் செயலாளர் வே.குலநாயகம் நாடாவெட்டித் திறந்துவைப்பதையும், வேள்ட் விசன் நிறுவன மாவட்ட முகாமையாளர் ரி.வசந்தநாயகம், திட்ட அலுவலர் எஸ்.ஜோய், பிரதேச சபை தொழில் நுட்ப அலுவலர் ந.விஜயகுமாரன், கிராம சேவைஅலுவலர் எஸ்.சுபேந்திரராஜா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: கட்டைவேலிச் செய்தியாளர்)



யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம், சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்துடன் இணைந்து பன்னாலை கணேசர் முன்பள்ளிக்குத் தளபாடங்கள் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் றொட்டேறியன் கே.பாலசுப்பிரமணியம் தளபாடங்களை சனசமூக நிலைய் தலைவரிடம் கையளிக்கின்றார்.



ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கனகசபை இராசேந்திரம் சிற்பக்கலைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய கலாசாரப் பெருவிழாவில் யாழ்.அரசாங்க அதிபரினால் ''கலை ஞாயிறு'' பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: நவாலிச் செய்தியாளர்)




வடமாகாணப் பிரதம செயலாளர் சி.ரங்கராஜனும், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கமும் அண்மையில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு விஜயம் செய்தபோது அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர் எஸ்.தியாகலிங்கம், சி.ரங்கராஜனுக்கு மாலை அணிவித்து கைலாகு கொடுத்து வரவேற்பதையும் பிரதம லிகிதர் திருமதி த.கிருஸ்ணபாஸ்கரன், திருமதி சிவலிங்கத்திற்கு மாலை அணிவித்து வரவேற்பதையும் அருகில் வைத்தியசாலையின் கௌரவ செயலாளர் கலக் விஸ்கநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.




சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூல் நிலையத்தில் 'ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்' நிகழ்வில் நூல் ஆய்வுரை இடம்பெற்றது.

நிகழ்வில் கவிஞர் சூரியநிலா உரையாற்றுவதையும், பிரதேசசபையின் வரணி உப அலுவலகப் பொறுப்பதிகாரி நா.தங்கவேல், பிரதம எழுதுநர் திருமதி கௌ.விக்னகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: தென்னவன்)



பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் பிரகடனப்படுத்தப்பட்ட பாலவிகாஸ் (சிறுவர்) தினத்தன்று யாழ்.சாயி நிலையத்தில் மனித மேம்பாட்டுக் கல்வி கற்கும் சிறுவர்கள், பெற்றோர் திருவடிகளுக்குப் பூசை செய்து, வணங்கி ஆசீர்வாதம் பெறும் காட்சி.



2008இல் மூவாயிரம் மரக்கன்றுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மானிப்பாயைச் சேர்ந்த பசுமைப்புரட்சியாளரும், ரயில் நிலைய ஒய்வுபெற்ற அதிபருமான வைத்திலிங்கம் செகராஜசிங்கம் பயனாளிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கி ஊக்குவிப்பதைப் படத்தில் காணலாம்.

கடந்த 20 ஆண்டுகளில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்க[illegible] படைத்துள்ளார் இவர். (படம்: ரமேஷ்)



காரைநகர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டுவதையும்,

அருகில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன் ஆகியோர் நிற்ப தையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுவிழா

யாழ்.கோட்ட முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புனித யாகப்பர் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி பி.ஜெ.மேரிசந்திரா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ கலந்துகொள்வார். (202)

## 49ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்மகிழ
30 - 05 - 1943

கண்நெகிழ
24 - 08 - 2008

### அமரர் அம்பலவாணர் செல்வராசா (பூதர்)

எங்கள் குலத்தின் தெய்வமே ஆகி
எங்கள் வாழ்வு சிறந்திடக் காத்த
உங்கள் பிரிவை எவ்விதம் பொறுப்போம்
பாசம் கொண்ட குடும்பத் தலைவனாய்
உழைத்த பெருமை உங்கள் பெருமை!
பிள்ளைகள் கல்வித் துறையினிற் சிறந்திட
ஆற்றிய பணிகள் அரும்பெரும் பணிகள்
விண்ணடைந்தாலும் என்றும் நெஞ்சில்
விளங்கும் தெய்வம் நீங்களே! நீங்களே!!

அன்னார் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (11.10.2008) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பூதர் வளவு, அச்செழு. (79126) குடும்பத்தினர்.

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்நகர் மையம், யாழ்ப்பாண றோட்டறக்ட் கழகங்கள் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கலட்டி செவிப்புலனற்றோர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

## கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.11

'நிக்கொட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கூட்டுறவுத் திணைக்களமும் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையும் இணைந்து நடத்தும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஐந்து நாள் செயலமர்வு கடந்த வியாழக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகியது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கான புதிய 'கணக்கு வைப்பு முறைகளும் கணக்காய்வு முறைகளும்' என்ற தலைப்பில் இந்தச் செயலமர்வு இடம்பெற்று வருகின்றது.

கூட்டுறவுத் திணைக்கள உயரதிகாரிகள் மீற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இந்தச் செயலமர்வு இடம்பெற்று வருகின்றது. (202-224)

## சிறுவர் தின கொடி வாரம்

குருநகர், ஒக்.11

சிறுவர்தின கொடிவாரம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கோயில் வீதியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி அமைப்பின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வுள்ளார்.

'கிறிஸ்ரியன் எயிட்' அமைப்பின் பிரதிநிதி திருமதி தர்சினி மகேந்திரன், இ.தமிழரசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், எஸ்.யோகராஜன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (202-51)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி
பசுபதி வானதி



மலர்வு
11-07-1981

உதிர்வு
28-08-2008

எங்கள் செல்வ விளக்கம்மா - நீ
எம்மை இருளில் விட்டு
எங்கு சென்றுவிட்டாயம்மா - உன்
அன்புக்காய் ஏங்குகின்றோம்.

அருளய் ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்கா.

(79141)

## மரண அறிவித்தல்



### திருமதி இராசலிங்கம் கமலாம்பிகை

இல.29, காராக்கட்டு லேன், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் கமலாம்பிகை நேற்று முன்தினம் (09.10.2008) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், சத்தியலிங்கம், தயானலிங்கம் (வவுனியா), கமலவதனா, சுந்தர லிங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரேமா, அற் புததேவி, கிருபா, ஜராஸ்கனி ஆகியோரின் மாமியும் உஷாகாந்த் (ஜேர்மனி), சுகிர்தா (மாணவி), லிங்கையா (மாணவி), சுவேயா (டாக்டர்- அமெரிக்கா), சுகந்தன் (மாணவன்), மயூரன், பிரியங்கா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

29, காரைக்காட்டுலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (79119)

தகவல்:
சத்தியலிங்கம் (மகன்),
பிரேமா (மருமகள்).

உ

# முதலாவது ஆண்டு நினைவு நாள்



### உரும்பிராய் ஆசிரிய பிரான்

## கார்த்திகேசு இரத்தினம் அவர்கள்

(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை ஆகியவற்றில் சேவை புரிந்து இளைப்பாறிய ஆசிரியர்)

சிவபதமடைந்த திதி:
புரட்டாதி மாத பூர்வபக்க துவாதசி (11.10.2008 சனிக்கிழமை)

பூவுலகு
24.07.1927

சிவகதி
23.09.2007

### இரத்தினவாத்தியார் இரத்தினம்தான்

திதி வெண்பா
சீர்சால் சிறப்பின் சர்வசித்து புரட்டாதியில்
பேரார் பூர்வபக்க துவாதசியே- நீரர்
சிறப்புடனே வாழ்ந்து சிவனடியை சேர்ந்த
இறப்பில் இரத்தினத்தின் திதி.

நல்லோர்கள் வதிகின்ற யாழ்ப்பாணத்து
பெரியகடை வாத்தியாராய்ப் பண்டிதமணி
சொல்லிய நல்லாசான் மறைந்திப்போ
ஓராண்டு பூர்த்தியாகி விட்டவேளை
நல்லூரான் திருவடியை நன்றுவ்னி
நாளும் வாழ்ந்த எங்கள்
சொல்லூரான் இரத்தின வாத்தியாரின்
சோகமதை விட்டு சாந்தி காண்போம்!

உரும்பிராய் மண்ணிலே விவாகம் செய்து
உத்தமநல் மதலைகளைப் பெற்றெடுத்து
பெரும்புகழும் கீர்த்தியும் ஒருங்கிணைய
பேர் பெரிய அறுவரையும் படிப்பித்து
திரும் சுகமும் தான்பெற்று வாழ்ந்தநற்
குணவள்ளல் இரத்தினம் மறைந்தே
பொருந்திய ஆண்டொன்று போயிடவே
போற்றுதும் நல்லூரான் திருவடியை!

அன்னாரின் ஆத்தும சாந்திக்காக
அனுதினமும் நாமெல்லாம் பிரார்த்திப்போம்
மன்னவனாய் அவர்வாழ்ந்த காலமதில்
மாபெரிய வெற்றியை சூட்டிவிட்டார்
தென்னவனாம் சோமசுந்தர வருளினாலே
தேவியருளும் கிட்ட வேண்டியே
சொன்னவரின் ஆத்ம சாந்திக்காக
சோதிவடி வானவனை வேண்டுவோமே!

திருமதி இராசேஸ்வரி இரத்தினம் (மனைவி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(79060)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்மூடும் சுவடுகள்....!

**ந.சத்தியபாலன்**

இந்த உலகம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. மனிதன், ஆயிரம் சோதனைகளுக்கு மத்தியிலும் புதிது புதிதான தளங்களில் தனது அடையாளங்களைப் பதித்து வருகிறான். ஆனாலும்... மனிதனுடைய வாழ்க்கை... அதனுடைய சோபிதங்கள்... அதில் முன்பிருந்த மகிழ்ச்சி...

எல்லாம் என்னவாயின?

வாழ்வு முழுதும் ஏதோ ஓர் அவசர கதியில் நிகழ்வது போலவும் ஓர் இயந்திரத் தன்மை கொண்டிருப்பது போலவும் தோற்றவில்லையா? முன்பிருந்ததை விடவும் வசதிகள் அதிகரித்திருக்கின்றன. தொலைவுகள் சுருங்கியிருக்கின்றன. தொடர்புகள் இலகுவாயிருக்கின்றன. ஆனாலும் மனிதன்... அவனது மனப்பாங்குகள்.. பார்வை.. பழகும் விதம்... வாழ்க்கை விழுமியங்கள் எல்லாமும் மாறிப்போய் இயல்பிழந்து போனது போலில்லையா? எமது பாரம்பரிய வாழ்க்கை - அதன் எளிமையூடான மகிழ்ச்சி - மனிதர்களின் வெளிப்படையான தன்மை - இவையெல்லாம் என்னவாயின?

அந்த அழகிய சுவடுகள் எல்லாம் மெல்லமெல்ல மண்மூடிப் போகின்றனவா? நேசம் தோய்ந்த எமது பழைய உறவு முறைகள், தொடர்பு நடவடிக்கைகள், உறவு பேணும் தன்மைகள் இவையெல்லாம் அப்படியே அற்றுப் போய்விடப் போகின்றனவா?

இதோ பாருங்கள்... இன்றைய நவீன வசதிகள் பொருந்திய குடும்பமொன்றின் ஒரு வாழ்க்கைச் சூழலில் நிகழ்வின் ஒரு சித்திரத்தை....

அழகான ஒரு வீடு. கடந்த வாரம்தான் கட்டி முடித்துப் பூசி, அழகாக்கி, மெருகூட்டிய மாதிரி புதுசு மணக்கும் கோலத்தில் அதன் உள் மண்டபம்...

அதன் அழகை இரட்டிக்கும் விதத்தில் நவீன கருவிகள், ரி.வி., டெக், கொம்பியூட்டர், ஒலி பெருக்கிகள் எல்லாம் விதம்விதமாக மூலைக்கு மூலை வைக்கப்பட்டிருக்கின்றன.

ரி.வியின் முன்னால் அடுக்கப்பட்ட இருக்கைகள். அவற்றில் ஒன்றில் அறுபத்தைந்து வயதைத் தாண்டிவிட்ட ஒரு முதிய பெண்.

மண்டபத்தின் மறுபக்கத்தில் மேசையொன்றின் முன்னால் அமர்ந்து படிக்கும் ஒரு பெண் - பதினைந்து பதினாறு வயதிருக்கலாம். ரி.வி. சற்றே உயர்ந்த தொனியில் தொடர் ஒன்றை ஒளிபரப்பிக்கொண்டிருக்கிறது.

சத்தம் தொல்லையாக இருந்ததோ என்னவோ, அந்தப் பெண் சாதாரண தொனியில் கூறுகிறாள். "அம்மம்மா! 'வொலியூமைக்' கொஞ்சம் குறையுங்கோ".

"இதைவிடக் குறைச்சால் எனக்குக் கேளாது. நீ போய் உன்ர அறையில் இருந்து படியன்... ஏன் இந்த விறாந்தையிலிருந்து படிச்சாத்தான் உனக்கு ஏறுமோ..?"

- அம்மம்மாவின் குரலில் கோபம் தெரிகிறது.

"என்ர 'றூமில' காத்து வராது அம்மம்மா. யன்னலைத் திறந்தாலும் அந்தப் பக்கத்தில் காத்து வாறதில்லை. அதுக்குள்ள இருந்து படிக்கேலாது. புழுங்கும்..."

அந்தப் பெண் பொறுமையிழந்து கத்துகிறாள்.

"தொடங்கிற்றீயளா ரெண்டு பேரும். இந்த வீட்டில இந்தப் பிரச்சினை மட்டும் முடியாதப்பா. படத்தில, சீரியலில சண்டை இல்லாட்டிலும் இந்த ரெண்டு பேருக்கும் மட்டும் சண்டை வராமல் போகாது..."

- அம்மா தன் பங்குக்குச் சத்தம் போடுகிறாள்.

இது இன்றைய தலைமுறைகளுக்கிடையிலான ஓர் உறவு நிலையாக இருக்கிறது.

அம்மாவின் தாய் அம்மம்மாவாகவும், தந்தை அம்மப்பாவாகவும், அப்பாவின் தந்தை அப்பப்பாவாகவும், தாய் அப்பம்மாவாகவும் மாறிவிட்டதும் ஒரு கால மாறுதலின் தாக்கம்தான். இதுவே முன்னைய காலமாக இருந்தால் ஆச்சியாக, அம்மாச்சியாக, பெத்தாச்சியாக, பாட்டியாக, தாத்தாவாக அவர்கள் பேரக்குழந்தைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் ஆரோக்கியம், மன மகிழ்ச்சி இவற்றைச் சிந்தித்தே பேசுபவர்களாக, அன்பின் வடிவங்களாக இருந்தார்கள்.

இன்றைய அம்மம்மா அன்று பெத்தாச்சியாக இருந்தாள். (ஆச்சி என்று அழைக்கப்படுவதில் எதுவித மனச் சுருக்கமும் அன்றைய முதியவர்களுக்கு இருக்கவில்லை) எதன் பொருட்டாகவும் பேத்திகளோடும், பேரன்களோடும் அவர்கள் சரிக்குச் சரி நின்று கதைப்பதும் இல்லை. பாசம் பரிவோடு பேசும் அவர்களுக்கென்று ஓர் உலகமிருந்தது. தமது வயதும் தரமும் உணர்ந்து தமது மதிப்பை அவர்கள் இயல்பாகவே பேணிக்கொண்டார்கள்.

"பெரிய தங்கச்சீ..." எங்கள் அம்மாவை - அவருடைய அம்மா - எங்களுடைய பெத்தாச்சி அப்படித்தான் அழைத்தாள்.

"உவள் உன்ர சின்னன் இண்டைக்குக் காலமை முழுக்க இருமிக் கொண்டிருந்தவளெல்லே. ஏதேன் மருந்து குடுத்தனியே...?" கைத்தடியூன்றிப் படலை திறந்து வருகிறது பரிவின் குரல். "இந்தா இதை அவளிட்டக் குடிக்கக் குடு. சீரகம், மிளகு, கற்கண்டு போட்டுக் காய்ச்சினனான். வேணுமெண்டால் கொஞ்சம் பாலும் சேர்த்துக் குடு இருமல் சுகமாயிடும். சரியான வெயில் காலம். அதுதான் நெஞ்சில சளி பிடிச்சிட்டுது பிள்ளைக்கு".

பெத்தாச்சியின் கையிலிருந்து பித்தளைச் செம்பு. அம்மாவின் கைக்கு மாறுகிறது. இவ்வாறே அவர்களது அன்பும், புரிதலும், உதவும் இதயமும் அடுத்தடுத்த பரம்பரைக்கு ஏன் கைமாறத் தவறிப்போயின?

நவீனத்துவமும், வசதிகளும், படிப்பும் மனிதப் பண்பு களையும் விழுங்கி விடுமா என்ன?

*(சுவடுகள் இன்னும் பதியும்....)*

---

## இந்து சமய நடைமுறையில்
# சிலருக்குத் தெரிந்தது பலருக்குத் தெரியாதது

1. சமய தீட்சை பெற்ற ஒரு சைவசமயி மரணித்தால் அவரை 24 மணித்தியாலத்துக்குள் தகனம் செய்யவேண்டும்.
2. ஒரு சைவசமயி இறந்தால் "எம்பாம்" செய்து பலநாள்களுக்கு வைத்திருத்தல் தவறாகும். பின் அவ்வுடம்புக்கு அந்திமக்கிரியைகள் செய்வதில் பயனில்லை.
3. சிராத்தமும் அபயக்கிரியைகளில் ஒன்று. அதை பகல் நேரத்தின் பின் (அபராணத்தில்) செய்வதுதான் நல்லது. மரணக்கிரியைகளும் முற்பகலில் செய்வது நல்லதல்ல.
4. ஒருவர் தனது மாதா, பிதாக்களின் சிராத்தபக்கம் (அமாவாசை அல்லது பூரணை) வந்துவிட்டால் சிராத்தம் முடியும்வரை அபரக்கிரியை நடக்கு மிடத்திற்குச் செல்வது நல்லதல்ல. அத்துடன் அபரக்கிரியை உணவுகளை உண்ணக்கூடாது.
5. மனைவி கர்ப்பவதியாக இருக்கும்போது கணவன் பிரேத ஊர்வலத்துடன் செல்லக்கூடாது.
6. மனைவி கர்ப்பமுற்றிருக்கும் போதும், அபரக்கிரியை. நடந்த வருடத்திலும், விவாகம் செய்த வருடத்திலும். கிருகாரம்பம், கிருகப்பிரவேசம் (வீடு குடிபுகுதல்) செய்தலாகாது.
7. மற்றவர் சமைத்த உணவை உண்ணாமல், தானே சமைத்து (சுயபாகி) உண்பவர்களுக்கு மற்றவர்களால் வரும் ஆசௌசம் (தொடக்கு) இல்லை. சித்தர், யோகிகள், துறவிகள் ஆகியோருக்கு எவருடைய ஆசௌசமும் இல்லை.
8. ஒருவர் இறந்தால் அவருக்கு ஈமக்கிரியைகள் செய்வதற்கு உதவிய கர்த்தாவுக்கு சபிண்டீகரணம்முடியும் வரை ஆசௌசம் (தொடக்கு) இருக்கும்.
9. ஒரு பெண் பிறந்த நட்சத்திரத்திலே விவாகம் முதலிய சுபகருமங்களைச் செய்யலாம். ஆனால் ஆண் பிறந்த நட்சத்திரத்திலே அப்படிச் செய்யலாகாது.
10. ஆண் பிறந்த நட்சத்திரம் பெண்ணின் நட்சத்திரத்திற்கு பத்தாவதாக வரின் விவாகம் செய்யலாம்.
11. ஒரு மாதத்தில் இரு நட்சத்திரங்கள், இரு திதிகள் வந்தால், மாதப் பிற்பகுதியில் வரும் நட்சத்திரத்தை, திதியைக் கைக்கொள்வது முறை.
12. அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய 5 நட்சத்திரங்களிலும் ஒருவர் இறத்தல் கூடாது. அந்த 5 நட்சத்திரங்களையுமே பஞ்சமி என்பர். இது பஞ்சமி திதியல்ல . இந்த நட்சத்திரத்தில் ஒருவர் இறந்தால் பிரேதத்துடன் தென்னம்பிள்ளை அல்லது கமுகம்பிள்ளை எடுத்துச்சென்று பிரேதத்துடன் எரிக்கவேண்டும்.
13. ஒருவர் மரணம் அடைந்தால் அவரது உறவினர்கள் சுப காரியங்களைத் தவிர்க்கவேண்டிய காலம்.

| | |
|---|---|
| தந்தை - 1 வருடம் | தாய் - 6 மாதம் |
| மனைவி - 3 மாதம் | சகோதரன் - 1 1/2 மாதம் |
| புத்திரன் - 1 1/2 மாதம் | உறவினர் - 1 மாதம் |

உதவியவர்: மு.சந்திரகுமார், சங்கானை
(நன்றி: ம.சிவானந்தம் நினைவுமலர்)

---

# வார வசந்தம்



*டாக்டர் யோ.சத்தியன் ஓர் இளம் மருத்துவர். ஈழத்து புகழ் பூத்த இலக்கியவாதி களில் ஒருவரான செ.யோகநாதனின் புத்திரர். மருத்துவத்துறை ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள அவர் சிறுவர் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவர். ஓய்வு நேரங்களில் சிறுவர் இலக்கியம் படைப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருபவர். அந்த வகையில் சிறுவருக்கான நூல்கள் பலவற்றை படைத்துள்ளார் அவர்.*

*அவரது இந்தப்படைப்புகளின் நோக்கம் என்ன என்பதை அவரே விரிவாக எடுத்துக்கூறியுள்ளார். அந்த விளக்கத்தின் சிறுபகுதி வருமாறு:-*

*நெருப்பில் குதித்து, மூழ்கி, அதிலிருந்து மீண்டும் எழுந்துவரும் வெள்ளைக்கார கதாநாயகர்களும், அவர்களின் பயங்கரமான ஆயுதங்களுக்குப் பலியாகிப்போகும் இராட்சதர்களும் தமிழ்க் குழந்தைகள் இலக்கியம் என்ற பூங்காவினுள்ளே தங்குதடையின்றிப் புகுந்து நின்று கொண்டு சதிராடுகிறார்கள். காலத்தின் போக்கிலே போலிமுகங்கள் என்றுமே நிலைத்து நிற்கப்போவதில்லை. ஆனால் அச்சில் பதிந்து உலாவும் பண்பான நாயகர்களும் அன்பான செல்லப்பிராணிகளும் என்றென்றும் அவர்களின் மனதுகளில் நிலைத்து நிற்பார்கள்.*

*இவ்வாறு தமிழ் சிறார்களின் மேம்பாடு குறித்து ஆழமான கண்ணோட்டம் கொண்டவரான இந்த இளம் டாக்டர் எழுதியுள்ள 'சிவப்பு விமானம்' என்ற சிறுவர் சிறுகதை நூலிலிருந்து சிலவற்றை எமது இளம்வாசகர்களுக்காக - அவர்கள் வாசித்து பயன்பெறுவதற்காக - தொடர்ந்து வழங்கவிருக்கின்றோம்.*

## சிறுவர் தொடர் நவீனம்

**யோ.சத்யன்**

# குட்டி நாயாரின் வம்புத்தனம்

குட்டிச் சிறுவன் வாசுவிடம் அற்புதமான பொம்மைகள் பல இருந்தன. அவற்றைப் போலவே வண்ணப்படங்கள் கொண்ட கதைப் புத்தகங்களும் நிறைந்திருந்தன. அவனுக்கென்று பெற்றோர்கள் ஒதுக்கிக்கொடுத்த அறையிலே பொம்மைகளும், புத்தகங்களும் மலைபோல் குவிந்திருந்தன. பள்ளிமுடிந்து வந்து வேகவேகமாய் வீட்டுப் பாடங்களை எழுதி முடித்திடும் வாசு தினமும் மாலை வேளைகளில் சில மணிநேரங்களை யாவது தனது பொம்மை நண்பர்களுடன் சேர்ந்து கழித்திட ஒதுக்கிக்கொள்வான்.

முன்பெல்லாம் தனது பொம்மைகள் சிலவற்றை எடுத்துச்சென்று தோட்டத்து மாமரத்தின் நிழலிலே புற்தரையில் வைத்து விளையாடுவது வழக்கம். ஆனால் அன்றொருநாள் நடந்த சம்பவமொன்றின் பிறகு தனது அருமையான பொம்மைகளில் எதையுமே அவன் தோட்டத்துப் புற்தரைக்கு எடுத்துச்சென்று வைத்து விளையாடுவதில்லை. அன்று நடந்த அந்த அதிர்ச்சிகரமான சம்பவத்தின் நாயகன் வேறு யாருமில்லை. வாசுவின் வீட்டில் வளர்ந்துவரும் குறும்புத்தனம் நிறைந்த குட்டிநாயாரே அவர். தோட்டத்திலே அமர்ந்து விளையாடிக்கொண்டிருந்த வாசுவைப் பார்த்த குட்டிநாயாருக்கு தனது கழுத்தைச்சுற்றிக் கட்டப்பட்டிருந்த தோல்பட்டியின் மீது பொல்லாத கோபம் பிறந்தது. அந்தப் பட்டியுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருந்த கயிற்றால் வாசுவின் தாயார் அவரைக் கட்டிவைத்திருந்தார். வாசு வைத்து விளையாடிய பொம்மைகளில் குட்டிநாயாரை மிகவும் கவர்ந்தது அந்தப் பஞ்சுக்கரடி பொ[illegible]



விட்டு விட்டுப் பஞ்சுக்கரடி பொம்மையுடன் ஆனந்தமாய் விளையாடி மகிழ்ந்திடும் வாசுவின் மேல் அவருக்கு ஏற்பட்ட கோபம் நியாயமானதுதானே. உர், உர்ரென்று ஆரம்பத்திலும், வள், வள்ளென்று சிறிது நேரத்திலும் கத்திக் குலைத்து எத்தனை ஆர்ப்பாட்டம் செய்தபோதிலும் அவரை வாசு கண்டு கொள்வதாகவேயில்லை.

அதனால் இப்போது குட்டிநாயாரின் கோபம் முன்னிருந்ததை விடப் பன்மடங்காய் அதிகரித்தது. கழுத்தில் கட்டப்பட்டிருந்த பட்டியுடன் சேர்த்துக் கயிற்றைப் பலமாக இழுத்து இழுத்துப் பார்த்தார், கழுத்து வலித்தது தான் மிச்சம். பற்களால் கயிற்றைக் கடித்துக் கடித்துப் பார்த்தார். பல் வலி, கண்டதுதான் பலன். ஆவேசப்பட்டுத் துள்ளிக்குதிப்பதில் பலன் ஏதுமில்லையென்பதை உணர்ந்து கொண்ட குட்டிநாயார் அமைதியாகத் தரையில் அமர்ந்தார். முன்னங்கால்களில் கயிற்றின் ஒரு பகுதியைப்பற்றிக்கொண்டு பற்களால் அதைக் கடித்து மெதுமெதுவாக அறுக்கத் தொடங்கினார். குட்டிநாயாரின் கூர்மையான பற்களிலே மாட்டிக்கொண்ட கயிறு சிறிதுசிறிதாக அறுந்தது.

புற்தரையிலே பஞ்சுக்கரடி பொம்மையை வைத்துவிட்டு, மாமரத்திலே சாய்ந்து, கண்களை மூடி ஏதோ சிந்தித்திருந்தான் வாசு. பின்னர் வேகமாக எழுந்து அங்கிருந்து விரைந்தோடி வீட்டுக்குள் நுழைந்தான். வாசு ஓடுவதைக் கண்ட குட்டிநாயார், கயிற்றால் தன்னைக்கட்டி வைத்திருப்பதையும் மறந்து துள்ளிக் குதித்துத் தானும் வாசுவின் பின்னால் ஓடமுயன்றார். குட்டிநாயார் இழுத்த வேகத்தில், ஏற்கனவே அவரது பல்லுப் பட்டு பாதி அறுந்து பலவீனமாயிருந்த கயிறு பட்டென்று அறுந்தது.

கட்டிலிருந்தும் தப்பித்துக்கொண்ட குட்டிநாயார் வில்லினின்றும் விடுபட்ட அம்புபோல பாய்ந்து ஓடியவர் இப்போது ஒரே பாய்ச்சலில் பாய்ந்தோடி வந்து பஞ்சுக்கரடிப் பொம்மையை வாயில் கௌவி எடுத்துக்கொண்டார். குட்டிநாயாரின் வாயில் மாட்டிக்கொண்ட பஞ்சுக்கரடிப் பொம்மையின் நிலையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா என்ன? ரோஜாச் செடிகளைச் சுற்றி அம்மா அமைத்திருந்த பாத்திகளின் ஈரமான சேற்று மண்ணிலும் புற்தரையிலும் பஞ்சுக்கரடிப் பொம்மையைப் போட்டு உருட்டி எடுத்தார். ஈரமான சேற்று மண்ணிலும் புழுதியிலும் தோய்ந்து பஞ்சுக்கரடிப் பொம்மை பரிதாபமாகக் காட்சி கொடுத்தது.

வாயில் கௌவி வைத்திருந்த பொம்மையைத் தரையில் போட்ட குட்டிநாயார், அதைச் சுற்றிச்சுற்றி ஓடிவந்து 'வள்வள்' ளென்று குலைத்துத் தன்னுடன் விளையாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். தனது அழைப்பையும் மதித்திடாது மௌனமாயிருக்கும் கரடிப் பொம்மை மேல் கடுங்கோபம் கொண்ட குட்டி நாயார் அதை மீண்டும் வாயில் கௌவி எடுத்துக்கொண்டு, தோட்டத்தைச் சுற்றிவட்ட மிட்டு ஓடினார்.

வீட்டுக்குள் சென்று, கதைப்புத்தகமொன்றை எடுத்துக்கொண்டு, மீண்டும் மாமரத்தடிக்கு வந்த வாசுவின் உள்ளம் அதிர்ச்சியால் நடுங்கியது. மரத்தடியிலே வைத்திருந்த பஞ்சுக்கரடி பொம்மையைக் காணாததும், சேற்றிலே தோய்ந்ததொரு விந்தையான பொருளை வாயில் கௌவிக்கொண்டே, தோட்டத்தைச் சுற்றித் துள்ளிக் குதித்தோடும் குட்டிநாயாரைக் கண்டதும் நடந்து முடிந்தவற்றையெல்லாம் ஒரு கணத்தில் அவன் ஊகித்துக் கொண்டான். தரையில் கிடந்ததொரு குச்சியைக் கையில் எடுத்துக்கொண்டு, குட்டிநாயாரை நோக்கி விரைந்தோடினான்.

[குட்டிநாயார் அடுத்த வாரமும் பாய்வார்...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளுக்கு புத்துயிர் ஊட்டிய வலி.கிழக்குப் பிரதேச சபை

## உள்ளூராட்சி வார நிகழ்வுகளுக்குப் பதிலாக விறுவிறுப்பான விளையாட்டுகள் நடத்திச் சாதனை


தலையணைச் சண்டை

மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களிடையே தயிர்ப்பானை உடைத்தல், தலையணைச் சண்டை, கிடுகு பின்னல், சாக்கு ஓட்டம், மெதுவான சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல், விநோத உடை, 1500 மீற்றர் ஓட்டம் ஆகிய 8 பாரம்பரியப் போட்டிகளை நடத்திப் புதிய சாதனை படைத்துள்ளது வலி.கிழக்குப் பிரதேச சபை.

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் சிறப்புற இடம் பெற்று வருகின்றன.

இந்த வகையில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் ஒன்றான வலி.கிழக்கு (புத்தூர்) பிரதேச சபை ஏனைய சபைகளின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளுக்கு மாறாக, மிகவும் வினைத்திறனான வகையில் பாரம்பரிய விளையாட்டுகளை மீண்டும் அறிமுகம் செய்துள்ளது.

கடந்த 50 ஆண்டு காலங்களில் பிரபல்யம் பெற்றிருந்து, இப்போது அழிவடைந்து செல்கின்ற விளையாட்டுகளுக்குப் புத்துயிர் ஊட்டிய பெருமை வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் த.நடராஜாவையும் அவரோடு இணைந்து பணியாற்றிய அலுவலர்களையும் சாரும்.

இந்தப் பிரதேச சபையின் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளின் சங்கமம் கடந்த ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் பிரதேச சபையின் செயலாளர் தம்பையா நடராஜா தலைமையில் ஆரம்பமானது.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சிச் சபைகளைச் சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், ஆர்வலர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

தயிர்ப்பானை உடைத்தல் (ஆண், பெண்), தலையணைச் சண்டை (ஆண்), கிடுகு பின்னல் (ஆண், பெண்), சாக்கு ஓட்டம் (ஆண், பெண்), மெதுவான சைக்கிள் ஓட்டம் (ஆண், பெண்), கயிறு இழுத்தல் ( ஆண், பெண்), விநோத உடை (ஆண், பெண்), 1500 மீற்றர் ஓட்டம் (ஆண்) போன்ற விளையாட்டுகள் நாள் முழுவதும் சிறப்பாக நடைபெற்று அனைவரது மனங்களிலும் சந்தோசத்தையும் பாரம்பரிய விளையாட்டுகளின் பெருமைகளையும் ஏற்படுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் கே.வி.கணபதிப்பிள்ளையின் பிரதம மத்தியஸ்தத்தில் விளையாட்டுகள் உற்சாகமாக இடம்பெற்றன.

முதல் நிகழ்வாக ஆண்களுக்குரிய கயிறு இழுத்தல் போட்டி அனைத்து சபைகளுக்கு இடையே மிகவும் விறுவிறுப்பாகவும் உற்சாகமாகவும் இடம்பெற்றது.

இதில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை முதலாம் இடத்தையும் யாழ்.மாநகர சபை இரண்டாம் இடத்தையும் பிடித்துக்கொண்டன.

அதேபோல பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் வலி.கிழக்கு (புத்தூர்) பிரதேச சபை முதலாம் இடத்தையும், நல்லூர் பிரதேச சபை இரண்டாம் இடத்தையும் பெற்றன.

இந்தப் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளில் முக்கியமான சிறப்பம்சம் யாதெனில் 18 வயது முதல் 55 வயது வரையிலான ஆண், பெண் இருபாலாரும் போட்டிகளில் பங்குகொண்டு சிறப்பித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிடுகு பின்னல் போட்டி ஆண், பெண்களுக்கு எனத் தனித்தனியான போட்டியாக இடம்பெற்றது.

மிகவும் வினைத்திறனாகவும் விறுவிறுப்பாகவும் இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை க.செல்வராசா (வலி.தெற்குப் பிரதேச சபை), இரண்டாம் இடத்தை


கிடுகு பின்

க.உதயசூரியர் (மானிப்பாய் பிரதேச சபை), மூன்றாம் இடத்தை க.இராமச்சந்திரன் (சுன்னாகம் பிரதேச சபை) ஆகியோர் பெற்றனர்.

பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை புஸ்பராணி சிவகுமார் (வல்வெட்டித்துறை நகர சபை), இரண்டாம் இடத்தை நவநீதரம்பை சச்சிதானந்தம் (நல்லூர் பிரதேச சபை), மூன்றாம் இடத்தை உமாதேவி பாலசிங்கம் (புத்தூர் பிரதேச சபை), ஸ்ரீரஞ்சினி வசந்தகுமார் (மானிப்பாய் பிரதேச சபை) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இதன்பின்னர் விளையாட்டு வீரர்கள் மத்தியில் மிகவும் உற்சாகமாகவும் விறுவிறுப்பாகவும் தலையணைச் சண்டை இடம்பெற்றது.

இதில் முதலாம் இடத்தை பூதன் ரவி (வல்வெட்டித்துறை நகர சபை), இரண்டாம் இடத்தை செல்வராசா விஜிதரன் (வலி.தெற்குப் பிரதேச சபை), மூன்றாம் இடத்தை தம்பையா சத்தியமூர்த்தி (நல்லூர் பிரதேச சபை) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

தயிர்ப்பானை உடைத்தல் என்னும் பாரம்பரிய விளையாட்டு கடந்த 35 வருடங்களுக்கு முன்னர் ஆலயங்களிலும், முக்கிய களியாட்ட நிகழ்வுகளிலும் இடம்பெற்றது. தற்போது அருகிப்போன அந்த விளையாட்டினை மீண்டும் அறிமுகம் செய்து புத்துயிர் ஊட்டிய பெருமை வலி.கிழக்குப் பிரதேச சபை விளையாட்டுக் குழுவின் பிரதான அதிகாரிகளும் உள்ளூராட்சி உதவியாளர்களுமான த.ஸ்ரீமுரளிதரன், சு.மதியோகநாதன் ஆகியோரையே சாரும் என புத்தூர் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

பெண்களுக்கான தயிர்ப்பானை உடைத்தல் நிகழ்வில் முதலாம் இடத்தை திருமதி பி.பாலபாஸ்கரன் (நல்லூர் பிரதேச சபை), இரண்டாம் இடத்தை திருமாலினி திருநாவுக்கரசு (வலி.கிழக்குப் பிரதேச சபை), மூன்றாம் இடத்தை ஸ்ரீரஞ்சினி வசந்தகுமார் (மானிப்பாய் பிரதேச சபை) ஆகியோரும் ஆண்களுக்கான தயிர்ப்பானை உடைத்தல் போட்டியில் முதலாம் இடத்தைப் பூவிலிங்கம் லிங்கநாதன் (வலி.கிழக்குப் பிரதேச சபை), இரண்டாம் இடத்தை மு.டினேஸ் (நல்லூர் பிரதேச சபை) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இதனைவிட ஆண், பெண் என அதிகமான வீரர்கள் பங்குபற்றிய விளையாட்டாக மெதுவான சைக்கிள் ஓட்டம் விளங்கியது.

இதில் ஆண்களுக்கான போட்டியில் க.சசிகுமார் (புத்தூர் பிரதேச சபை) முதலாம் இடத்தையும், கோ.நாகேந்திரம் (வல்வெட்டித்துறை நகர சபை) இரண்டாம் இடத்தையும், இராசதுரை நிதீபன் (வல்வெட்டித்துறை நகர சபை) மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதேபோன்று விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டிகளில் எல்லோரது மனதையும் கவர்ந்த பாரம்பரிய போட்டிகளில் ஒன்றான ஆண், பெண்களுக்கான சாக்கு ஓட்டப் போட்டி இடம்பெற்றது.

இதில் ஆண்களுக்கான போட்டியில் சி.சிவபாலசுந்தரம் (மானிப்பாய் பிரதேச சபை) முதலாம் இடத்தையும், மா.ஜெயசூரியகுமார் (மானிப்பாய் பிரதேச சபை) இரண்டாம் இடத்தையும், க.ஜெகதீஸ்வரன் (நல்லூர் பிரதேச சபை) மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான சாக்கு ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை அனுலா அம்பிகாவதி (வல்வெட்டித்துறை நகர சபை) இரண்டாம் இடத்தை ரதிக்கா தாமோதரம்பிள்ளை (வல்வெட்டித்துறை நகர சபை), மூன்றாம் இடத்தை சிவப்பிரியா பரமேஸ்வரன் (நல்லூர் பிரதேச சபை) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

1500 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் வீரர்களும் பங்குபற்றியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதில் முதலாம் இடத்தைச் செல்வராசா விஜிதரன் (வலி.தெற்கு பிரதேச சபை), இரண்டாம் இடத்தை மார்க்கண்டு ஜெயசூரியகுமார் (மானிப்பாய் பிரதேச சபை), மூன்றாம் இடத்தை க.கஜேந்திரன் (வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மேற்படி நிகழ்வுகள் எல்லாவற்றையும் விட மேலானதாக விநோத உடைப்போட்டி அமைந்திருந்தது.

இதில் யாழ்.குடாநாட்டில் 'பாதீனியம்' எப்போது, யாரால், எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்ற பிரச்சினையைத் தத்ரூபமாக எடுத்துக் காட்டியதுடன் 'பாதீனியம்' தாவரத்தை முற்றாக அழித்தே தீரவேண்டும் என்ற வேடத்தில் வந்த எஸ்.செல்வானந்தம் (புத்தூர் பிரதேச சபை) முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் பூலோகம், எமலோகம் ஆகியவற்றில் உள்ள கர்மவினைகளைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டிய க.உதயசூரியர் (மானிப்பாய் பிரதேச சபை) இரண்டாம் இடத்தையும்

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

பெற்றுக்கொண்டார். 3ஆம், 4ஆம் இடங்களை முறையே நல்லூர் பிரதேச சபையைச் சேர்ந்த க.ஜெகதீஸ்வரன், ம.அசோதரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மேற்படி போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்கள், வீராங்கனைகளுக்கான சான்றிதழ்கள், வெற்றிக்கிண்ணங்கள் என்பன உள்ளூராட்சி வார இறுதிநாளில் வழங்கிக் கௌரவிக்கப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

செ.ரமேஷ்

இதேவேளை பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு வலி.கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் த.ஸ்ரீமுரளிதரனால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

மேற்படி பாரம்பரிய போட்டிகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு அச்சுவேலி, உரும்பிராய், புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உப-அலுவலகப் பொறுப்பதிகாரிகளும், தலைமை அலுவலகப் பொறுப்பதிகாரிகளும் அலுவலர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்கியதாகப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா பெருமையுடன் நன்றி தெரிவித்தார்.

# சனியைப் போல் கொடுப்பாருமில்லை, கெடுப்பாருமில்லை

சனீஸ்வரனுக்கென்று சிறப்பாக புரட்டாதிச் சனி அமைகின்றது. இத்தினத்தில் விசேடமாக சனீஸ்வரனைக் குறித்து விரதம் அனுட்டிக்கப்படும். வாழ்வில் வருகின்ற துன்ப துயரங்களைப் போக்கி நல்லனவற்றை ஏற்படுத்தி நலமாக வாழ்வதற்காக சனீஸ்வரனின் விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விரதம் இருக்கமாட்டாதவர்கள் விசேடமாக அமைந்துள்ள புரட்டாதிச் சனி நாள்களிலேயாவது நோன்பு நோற்று நலம் பெறுவார்கள். சனிக்கு அதிபதியாக இருப்பது விஷ்ணு என்பதன் காரணத்தினால், விசேடமாக விஷ்ணு ஆலயங்களில் வழிபாடு செய்வார்கள். அதுமட்டுமன்றி சனிக்கிழமை தோறும் விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்வது மிகவும் நன்றாக அமையும்.



சிவாலயங்களிலும் சனீஸ்வர வழிபாடு மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. சனீஸ்வரன் சிறந்த சிவபக்தன். இவ்வாறான சனீஸ்வரனின் வழிபாடானது, சைவமக்களால் சிறப்பாகக் கடைக்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்தோடு நவக்கிரகங்கள் உள்ள எந்த ஆலயத்திலும் சனீஸ்வர வழிபாட்டினை மேற்கொள்ளலாம்.

இவ்வாறான சனீஸ்வர வழிபாட்டினை புரட்டாதிச் சனியில் மேற்கொள்வது சிறப்பாகும். சனீஸ்வரனுக்கு பிடித்த பொருள்கள் அவரைச் சாந்திப்படுத்தி நல்ல நிலையினை ஏற்படுத்தும். ஆதலால் முறைப்படி இவ்விரதத்தினை அனுட்டித்து நற்பலன்களைப் பெறவேண்டும்.

சனீஸ்வரனுக்குப் படைக்கப்படும் தானியமாக எள் கருதப்படுகின்றது. அதேபோன்று நிறத்தில் கறுப்புநிறம் உள்ளது. வாகனமாக காகம் கொள்ளப்படுகின்றது. எனவேதான் சனீஸ்வரனுக்கு கரிய பட்டினைச் சாத்தி வழிபடுகின்றனர். சனிக்கிழமைகளில் செய்ய வேண்டிய காரியங்களாக எள் சாதம் நிவேதனம் செய்தலும், காகத்திற்கு உணவிடுதலும் முக்கியமானதாக அமைகின்றது. அவ்வாறாக செய்கின்றபோதுதான் சனி தோஷம் நீங்கப்பெற்று நல்வாழ்வினைப் பெறமுடியும்.

**இன்று புரட்டாதி கடைசிச் சனி**

இன்று ஆலயங்கள் தோறும் எள் பொட்டலம் கட்டி சனீஸ்வர தோஷம் நீங்குவதற்காக எரிக்கப்படுகின்றது. இது முழுமையாக எரிந்து நன்றாக நீறாகும்படி நிறைய நல்லெண்ணெய் விடவேண்டும். அரைகுறையாக எரிந்து நிற்றல் தீமை பயப்பதாகவே கருதப்படுகின்றது. அத்தோடு சனீஸ்வர விரதத்தின் போது எண்ணெய் தேய்த்து நன்றாக நீராட வேண்டும். இதனையே ஔவைப் பாட்டியார் "சனி நீராடு" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதிகாச புராண இலக்கியங்களிலெல்லாம் சனீஸ்வரனின் பீடிப்பையும் அதனால் மன்னர்கள் போன்றவர்கள் பட்ட கஷ்டத்தினையும் படித்திருக்கின்றோம். அவ்வாறான சனி கொடுப்பதிலும் பின் நிற்பதில்லை. உரிய முறைப்படி விரதமிருந்து சனீஸ்வரனை தொழுது வந்தால் துன்ப, துயரங்களெல்லாம் விலகி நல்வாழ்வு கிட்டி விடும்.

சைவப்புலவர் பொன்.சுகந்தன்.

# முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு போக்குவரத்து அமைச்சு கோரிக்கை

கொழும்பு, ஒக்.11

வடக்கில் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள விடுதலைப் புலிகள் நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தி, படையினரின் கவனத்தைத் திசைதிருப்ப பொதுப் போக்குவரத்து சேவைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் முயற்சிகளில் ஈடுபடலாம். எனவே பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

புலிகளின் இத்தகைய மிலேச்சத்தனமான தாக்குதல்களைத் தடுப்பதற்க பொது மக்கள் முன்வரவேண்டும். கடந்த சில மாதங்களில் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டமையினால் தான் புலிகள் மேற்கொள்ளவிருந்த பல தாக்குதல் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

படை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள படையினர் நாளுக்குநாள் வெற்றிகளைப் பெற்றுவரும் இச்சந்தர்ப்பத்தில் அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்றும் போக்குவரத்து அமைச்சு மேலும் தெரிவித்திருக்கிறது. (சி)

## உங்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்...

**உறுப்புரை - 4**

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது.

**உறுப்புரை - 5**

எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ, தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது.

**உறுப்புரை - 6**

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின்முன் ஓர் ஆளாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

**உறுப்புரை - 7**

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள் என்பதுடன் பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையவர்களாவர்.

**உறுப்புரை - 8**

சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காகத் தகுதி வாய்ந்த தேசிய நியாய சபைகளில் பயனுறுதியுடைய பரிகாரத்தைப் பெற உரிமையுடையவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் நிதிநெருக்கடியில் சிக்கியுள்ள வங்கிகளை மீட்க அந்நாட்டு அரசு முடிவு



லண்டன்,ஒக்.11

பிரிட்டனில் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள வங்கிகளை மீட்க, அந்நாட்டு அரசு முன்வந்துள்ளது. இதற்காக அரசு 105 லட்சம் கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. அத்துடன், பெரிய வங்கிகளில் சிலவற்றை பகுதி அளவில் தேசிய மயமாக்குவதற்கு, ரூபா 10 லட்சத்து, 50 ஆயிரம் கோடி செலவிடப்படுமென்றும் அது அறிவித்துள்ளது.

இங்கிலாந்து நிதி நிறுவனங்களின் மீதான மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் பொருட்டு, 8 பெரிய பிரிட்டிஷ் வங்கிகள்,நிதி நெருக்கடியிலிருந்து மீட்கப்படும். இதன் பொருட்டு, அவற்றின் பங்குகளை வாங்குவதற்கு, 10 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாவை முதலீடு செய்யப்படும் என்றும் இங்கிலாந்து அரசு தெரிவித்துள்ளது.

அசாதாரண ஒரு சூழ்நிலையில், இது போன்ற துணிச்சலான நடவடிக்கை அவசியமேயாகும் என பிரதமர் கோர்டன் பிரவுன் கூறியுள்ளார்.

உலக முழுவதும் நிலவும் நிதி நெக்கடியிலிருந்து, வங்கிகளை மீட்பதற்காக, மற்றைய நாடுகளும், ஏனைய ஐரோப்பிய நாடுகளும், வங்கிகளில் முதலீடு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

ஐரோப்பிய மத்திய வங்கியும், ஒருநாள் கடனாக நிதிச்சந்தைக்கு 2 லட்சத்து, 80 ஆயிரம் கோடி ரூபாவை வழங்குகிறது. பத்திரங்களில் உள்ளவற்றைப் பணமாக்குவதற்கும் அது, வட்டிக் குறைப்புத் திட்டத்தையும் அறிவித்துள்ளது.

## வளிமண்டலம் மாசடைவதால் கருவிலிருக்கும் சிசுவுக்கும் ஆபத்து!

ஸ்டொக்ஹோம்,ஒக்.11

வளிமண்டலம் மாசடைவதால் கருவிலிருக்கும் குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படக்கூடும். கருவிலிருக்கும் சிசுக்களின் நுரையீரலின் வளர்ச்சியை இது பெரிதும் பாதிக்கும் என பேர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

241 கர்ப்பிணிகள் இது தொடர்பான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுத்தன்மை மிக்க வாயுக்கள் வளிமண்டத்தில் கலக்கின்றன. இதனால் வளிமண்டலம் மாசடைகிறது. இதனை சுவாசிப்போர்க்கு பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

பெருந்தெருக்கள், வாகன போக்கு- வரத்து மிக்க வீதிகள் ஆகியவற்றையொட்டிய பிரதேசங்களில் உள்ள கர்ப்பிணிகளின் சிசுக்கள், வளிமண்டல மாசினால் பாதிப்படைந்திருந்தன. வளர்ச்சி மந்தகதியடைந்திருந்தமை தெரியவந்தது என்றும் இந்த ஆய்வாளர்கள் விளக்கியுள்ளார்கள்.

## பாக். விமானங்கள் தாக்குதல்; இருபது தீவிரவாதிகள் மரணம்

இஸ்லாமாபாத்,ஒக்.11

பாகிஸ்தானின் மின்கோரா நகரப்பிராந்தியத்தில், தீவிரவாதிகளின் இலக்குகளை நோக்கி, பாகிஸ்தான் விமானப்படைப் போர் விமானங்கள் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன. இவற்றில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் என, இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

பாகிஸ்தானின் வட மேற்கு எல்லைப் புற மாநிலத்தில், பழங்குடியினமக்கள் செறிந்த வாழும் ஸ்வாத் பிரதேசத்தில் மின் கோரா நகர் அமைந்துள்ளது. ஆப்கானில் தலிபான்களும், அல்-குவைதா தீவிரவாதிகளும் இப்பிராந்தியத்தில் ஊடுருவியுள்ளார்கள் என இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிலிருந்து விரட்டப்பட்ட தலிபான் தீவிரவாதிகளும், அல்-குவைதா தீவிரவாதிகளும் பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியத்தியங்களில் ஊடுருவித் தலைமறைவாக இருந்து வருகிறார்கள். அத்துடன் இவர்கள் பாகிஸ்தானிலும் இரத்தக் களரிகளுக்கு வழியமைத்து வருகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

வான்வழித்தாக்குதல்களில் கொல்லப்பட்ட தீவிரவாதிகளில், அவர்களின் அதி முக்கிய தளபதிகளில் சிலரும் அடங்குவர். இவர்கள் தேடப்பட்டு வந்தவர்கள் ஆப்கானோடு ஒட்டிய எல்லைப்புற மாநிலங்களில், பாகிஸ்தான் இராணுவத்தின் அதிரடி வேட்டைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## சமாதானத்துக்கான நோபல் பரிசு முன்னாள் பின்லாந்து ஜனாதிபதிக்கு



ஒஸ்லோ, ஒக். 11

இவ்வாண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு முன்னாள் பின்லாந்து ஜனாதிபதியும், ஐ.நா.வின் விசேட தூதருமான மார்ட்டி அஹ்டிஸாரிக்கு வழங்கப்படுகிறது.

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில், நோபல் பரிசு நிறுவனம் நேற்று வெள்ளிக்கிழமை இத்தகவலை வெளியிட்டது.

ஐ.நா.வின் விசேட தூதுவரான மார்ட்டி அஹ்டிஸார் கோசோவோ விவகாரம் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டுவந்தவர். 2005 ஆம் வருடம் இந்தோனேஷிய அச்சே மாகாண விவகாரம் சம்பந்தப்பட்ட பேச்சுக்களில் நடுவராக இருந்தவர். இவற்றின் வாயிலாக இவர் அமைதித் தீர்வுக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

## 20 ஒளியாண்டுகள் தூரத்திலுள்ள கோளில் மதிநுட்ப உயிரினங்கள் இருக்கின்றனவா?



சுமார் 20 ஒளியாண்டுகள் தூரத்துக்கு அப்பால் மதிநுட்ப உயிரினங்கள் இருக்கலாம் என்று கருதத்தக்க கோள் ஒன்றை நோக்கி பூமியில் இருந்து தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்தகவல், குறித்த கோளை 2019 ஆண்டளவில் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அங்கு மதிநுட்ப உயிரினங்கள் இருக்கும் பட்சத்தில், மனிதன் பூமியிலிருந்து அனுப்பியுள்ள தகவலுக்கு பதில் தகவல் கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதற்காக 40 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருக்கும்.

பூமியிலிருந்து அனுப்பப்பட்டுள்ள தகவலில் சுமார் 501 புகைப்படங்கள், வரைபடங்கள், எழுத்துருத் தகவல்கள் ஆகியவை உள்ளடங்கியுள்ளன. இத்தகவல்கள் உக்ரைனிலுள்ள பழைய சோவியத் கால உபகரணங்களைப் பயன்படுத்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## பாகிஸ்தான் குண்டு வெடிப்புகளில் 24 பேர் பலி; ஏராளமானோர் காயம்

இஸ்லாமாபாத்,ஒக்.11

இஸ்லாமாபாத் அருகே மிகச் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 8 பேர் பலியாகினர். உள்ளூர் பொலிஸார் உட்பட இருபதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தக்குண்டு வெடிப்பை நிகழ்த்தியவர்கள் மற்றும் இதற்கான காரணம் எதுவும் தெரியவில்லை. இஸ்லாமாபாத்திலிருந்து சில மைல் தூரத்துக்கப்பாலுள்ள காவலர் குடியிருப்புப் பகுதியில் இந்த குண்டு வெடித்துள்ளது. இதில் ஏற்பட்ட அதிர்வில் பல குடியிருப்புகளும் அலுவலங்களின் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கின.

குண்டுவெடிப்பு நடந்த இடத்துக்கு அருகில்தான் தேசிய பொலிஸ் அகாடெமி அமைந்துள்ளது. சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், அரசு மருத்துவமனை ஆகிய முக்கிய அமைப்புகளும் இங்குதான் உள்ளன.

பாகிஸ்தானை அச்சுறுத்தும் பயங்கரவாதம் குறித்து விவாதிக்க நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தை ஜனாதிபதி சர்தாரி கூட்டியிருந்த சமயம் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தான் வடமேற்கு எல்லை மாகாணத்தில் இடம் பெற்ற வீதியோரக் குண்டுவெடிப்பில் 16 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் நான்கு மாணவர்களும், நான்கு பொலிஸாரும் எட்டு சிறைக்கைதிகளும் அடங்குவர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

திர் மாவட்டத்தின் திர்பாலா பகுதியில் இவ் வீதியோரக் குண்டு வெடித்தது. இதில் ஏராளமான பாதசாரிகள் காயமடைந்தார்கள். பாடசாலை பஸ்ஸும், சிறைக்கைதிகளைக் கொண்ட ட்ரக்கும் சென்று கொண்டிருந்த சமயம் இவ்வீதியோரக் குண்டு வெடித்துள்ளது என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது.

தீவிரவாதிகள் தன்னியக்கக் கருவி மூலம் குண்டை வெடிக்க வைத்துள்ளார்கள். குண்டு வெடிப்பில் சிக்கி காயமடைந்த அநேகரை, உள்ளூர் வாசிகள் தனியார் வாகனங்களில் ஏற்றி, அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார்.

## சீனாவில் பாலில் கலப்படம் செய்யப்பட்டதால் பத்தாயிரம் குழந்தைகள் வைத்தியசாலையில்

பீஜிங்,ஒக்.11

சீனாவில் கலப்படப் பால் அருந்தியமையால் உடல் நலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 10,666 பேர் இன்னமும் மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை பெறுகின்றனர். அவர்களில் 4 பேரின் நிலமை கவலைக்கிடமாகவே இருக்கின்றது என மருத்துவ வட்டாரம் தெரிவித்துள்ளது.

கலப்பட பாலை அருந்தியமையால் மொத்தம் 54,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிப்படைந்தனர். இந்த பாதிப்பு, மருத்துவ சிகிச்சையால் ஓரளவு தணியுமே தவிர எதிர்காலத்தில் என்னென்ன பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை முன்கூட்டியே தெரிவித்து விட முடியாது என்றும் அது குறிப்பிட்டது.

பாலில் அடர்த்தி இருக்க வேண்டும்; மருத்துவகூடங்களில் ஆய்வு செய்யும் போது சத்து அதிகம் நிறைந்த பானம் என்று தெரிய வேண்டும் என்பதற்காக மெலாமைன் என்ற ரசாயனத்தை இந்த பால்மா உற்பத்தியாளர்கள் அளவுக்கு அதிகமாகச் சேர்த்து விட்டார்கள். அதை அருந்தியதால் இக் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் மருத்துவ வட்டாரம் விளக்கியது.

மெலாமைன் என்பது தொழிற்றுறையில் பயன்படுத்தப்படும் ரசாயனம். பிளாஸ்டிக், பெயிண்ட், ஒட்டுப்பசைகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு மெலாமைனைப் பயன்படுத்துவார்கள். இதனை இவர்கள் பாலில் ஊட்டச்சத்து அதிகம் இருப்பதைப் போல காட்டுவதற்குச் சேர்த்திருக்கிறார்கள் என்றும் அவ் வட்டாரம் அதிருப்தி தெரிவித்தது.

மெலாமைன் சேர்க்கப்பட்ட பாலைக் அருந்தி, சீனாவில் ஏராளமான குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் வெளியானதை அடுத்து உலகின் பல்வேறு நாடுகளும் சீனாவிலிருந்து பால் மா இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டன.

பால் மாவு மட்டுமல்ல, சீனாவிலிருந்து தயாராகும் எல்லாவிதமான உணவுப்பண்டங்களையும் இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டன. இதனால் சீனத்தொழிற்றுறைக்கு மிகப்பெரிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. பால் மாவு தயாரிக்கும் ஒரு நிறுவனத்தின் [illegible] சீனாவே இப்போது சந்தேகத்துக்கு உரியதாகிவிட்டது.

## பல்கலை மாணவர் பயணித்த பஸ் விபத்து: 19பேர் உயிரிழப்பு

### தாய்லாந்தில் கொடூரம்!

பாங்கொங்,ஒக்.11

தாய்லாந்தில் பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 19 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 50 பேர் படுகாயம் அடைந்தனர் என தாய்லாந்து பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் சிக்கிப்பலியான 19 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. பஸ்ஸுக்கடியில் சிக்குண்டிருந்த மூவரும் மீட்கப்பட்டனர் என உள்ளூர் பொலிஸ் அதிகாரி கூறினார்.

இந்த விபத்துக்கு பஸ் ஓட்டுனரின் கவனக்குறைவே காரணமாகும். இவ்விபத்தில் அவரும் உயிரிழந்திருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

பஸ் ஓட்டுனர் தூங்கியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இறந்தவர்களில் 16 ஆண்களும் 3 பெண்களும் அடங்குவர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்கலைக்கழக மாணவர்கள் சுற்றுலாவுக்குச் சென்று [illegible] விபத்து ஏற்பட்[illegible]

## இரு தலைகளுடன் அதிசய ஆமை!



சீனாவின் வுவேயி அன்ஹூயி மாகாணத்தில் இரு தலைகளுடன் கூடிய அபூர்வ ஆமையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த ஆமையைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியின் வேகங்கள் மிரட்ட இரண்டாம் நாளில் சுருண்டது ஆஸி!

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே பெங்களூரில் நடைபெற்றுவரும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளர்களான சகீர் கான் மற்றும் இசாந்த் சர்மா ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சால் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எனினும், அணித் தலைவர் பொண்டிங் மற்றும் ஹஸி ஆகியோர் பெற்றுக்கொடுத்த அசத்தலான இரு சதங்களுடன் அந்த அணி 430 ஓட்டங்களைக் குவித்து ஓரளவுக்கு தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டது.

முன்னதாக முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 254 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்திரேலியா நேற்று 430 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த மைக்கல் ஹஸி நேற்று நிதானமாகவும் அதிரடியாகவும் துடுப்பெடுத்தாடி ஒரு சிக்ஸர், 15 பவுண்டரிகளுடன் 146 ஓட்டங்களைப் பெற்று சகீர்கானின் பந்தில் போல்டானார். தொடர்ந்து வந்த மைக்கல் கிளார்க் 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகீர் கானின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். ஷேன்



ஷேன் வட்சனின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் இந்திய வீரர்கள்.

வட்சன் 2 ஓட்டங்களுடன் இசாந்த் சர்மாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்துவந்த ஹட்டின் 33 ஓட்டங்களைப் பெற்று இசாந்த் சர்மாவின் பந்துவீச்சில் லக்ஷ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த பிரெட் லீ (27), ஜோண்சன் (1) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்துவீச்சில் போல்டாகினர். இறுதியில் ஸ்ருவேட் கிளார்க் ஆட்டமிழக்காமல் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் இருந்தார். உதிரிகளாகக் கிடைத்த 15 ஓட்டங்களுடன் 430 ஓட்டங்களுக்கு அந்த அணியின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக சிறப்பாக ஆடிய வேகப் பந்துவீச்சாளர்கள் சகீர்கான், இசாந்த் சர்மா ஆகியோர் முறையே 5 , 4 விக்கெட்டுக்களையும் சுழல் பந்துவீச்சாளர் ஹர்பஜன்சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய தினம் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக கௌதம்கம்பீர், விரேந்தர் ஷேவாக் ஆகியோர் களமிறங்கினர்.

நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 68 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதிரடியாக ஆடிய விரேந்தர் சேவாக் 7 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களையும், கௌதம் கம்பீர் 3 பவுண்டரிகளுடன் 20 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும்.

## உதைபந்தாட்ட தரவரிசை ஸ்பெயின் அணி முதலிடம்

புதுடில்லி, ஒக். 11

சர்வதேச கால்பந்து தரவரிசைப் பட்டியலில் ஐரோப்பிய சம்பியன் ஸ்பெயின் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. சர்வதேச கால்பந்து கூட்டமைப்பான 'பிபா' சார்பில் நேற்று முன்தினம் புதிய தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. 151ஆவது இடத்தில் இருந்த இந்திய அணி, 173 புள்ளிகளுடன் 148ஆவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. ஆசிய அளவில் 22ஆவது இடத்தில் உள்ளது.

ஐரோப்பய சம்பியன் ஸ்பெயின் அணி 1,643 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறது. இரண்டாவது இடத்தில் இத்தாலி (1,365 புள்ளி), மூன்றாவது இடத்தில் ஜேர்மனி(1,336 புள்ளி) ஆகிய அணிகள் உள்ளன. பிரேசில் அணி 1,280 புள்ளிகளுடன் நான்காவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

## இலங்கை வீரர்களின் பிரச்சினை தீர்ந்தது

அடுத்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இலங்கை வீரர்கள் விளையாடுவார்களா? என்ற சந்தேகம் நிலவியது. ஏனெனில் அதேநேரத்தில் இலங்கை அணியின் இங்கிலாந்துப் பயணம் உள்ளது.

ஆனால் ஐ.பி.எல். போட்டியில் விளையாட இலங்கை வீரர்களுக்கு கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது. அதன்மூலம் ஜெயசூரியா, ஜெயவர்த்தன, முரளிதரன் உள்ளிட்ட 12 இலங்கை வீரர்கள் அடுத்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் ஆடுவார்கள். கடந்த சில மாதங்களாக நடந்துவந்த சர்ச்சை தற்போது கிரிக்கெட் சபையின் தீர்மானத்தையடுத்து முடிவுக்கு வந்தது. (த)

## நல்பாண்டியன் முன்னேற்றம்

ஸ்ரொக்ஹோம், ஒக். 11

ஸ்ரொக்ஹோம் ஓபன் டென்னிஸ் போட்டிகளில் ஆர்ஜென்ரீனாவின் டேவிட் நல்பாண்டியன் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் முன்னாள் உலகின் 10ஆம் நிலை வீரரான சுவீடனைச் சேர்ந்த ஜோசிம் ஜோஹன்சன்னை அவர் 6-3, 6-2 என்ற நேர் செட்களில் வீழ்த்தினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் தாம் சிறப்பாக விளையாடியுள்ளார் என்றும், நல்பாண்டியன் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து ஸ்ரொக்ஹோம் ஓபன் டென்னிஸ் காலிறுதிச் சுற்றில் நல்பாண்டியன் ஸ்பெயினின் அல்பேர்ட் மோட்டனாஸுடன் மோதுகிறார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தாம் காயம் காரணமாக கடும் அவதிக்கு ஆளானார் என்றும், தற்போது அதிலிருந்து தாம் மீண்டு வந்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

## திருப்தி அளித்த ஆட்டம்

### பொண்டிங்

பெங்களூர், ஒக். 11

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் சதம் அடித்த ரிக்கி பொண்டிங் தனது ஆட்டம் திருப்தி அளிப்பதாக அமைந்திருந்தது என்று கூறியுள்ளார்.

பெங்களூரில் இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார்.

பெங்களூரில் இதுவரை தாம் 8 போட்டிகளில் விளையாடியுள்ளார் என்றும், 60 ஓட்டங்களுக்கு மேல் எடுத்ததில்லை என்றும் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

இதற்காக தாம் கடுமையாக உழைத்தார் என்றும், இதில் வேறு ரகசியம் ஏதுமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சப்பல் பற்றிக் குறிப்பிட்ட பொண்டிங், "அவர் ஒரு சிறந்த வீரர், சிறந்த துடுப்பாட்டப் பயிற்சியாளர் இங்குள்ள சூழ்நிலையில் விளையாடுவது குறித்து அவர் பயனுள்ள குறிப்புக்கள் கொடுத்தார்" என்று கூறினார்.

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் இஷாந்த் சர்மா சிறப்பாக பந்துவீசுகிறார் என்றும், எதிர்காலத்தில் பல வீரர்களுக்கு அவர் அச்சுறுத்தலாக விளங்குவார் என்றும் பொண்டிங் மேலும் தெரிவித்தார்.




## சானியா தலைமையில் ஆசிய பசுபிக் அணி

ஹொங்கொங், ஒக். 11

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள உலக ரீம் சலஞ்ச் டென்னிஸ் போட்டிகளில் ஆசிய பசுபிக் பிராந்திய அணிக்கு இந்தியாவின் சானியா மிர்சா தலைமை தாங்குகிறார்.



ஆசிய ஓபன் டென்னிஸ் போட்டிகளுக்கு முன்னோடியாக நடத்தப்படும் இந்தப் போட்டியில் ஐரோப்பா, ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஆசிய பசுபிக் அணிகள் மோதுகின்றன.

ஒவ்வொரு அணியிலும் 3 வீரர்கள் இடம் பெற்றிருப்பார்கள். ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு ஆட்டங்கள் நடைபெறும்.

ஐரோப்பிய அணிக்கு ஜெலினா ஜன்கோவிக்கும், அமெரிக்க அணிக்கு வீனஸ் வில்லியம்ஸும், ரஷ்ய அணிக்கு மரியா ஷரபோவாவும் தலைமை தாங்குவார்கள்.

போட்டியில் பங்கேற்கும் மற்ற வீரர்களின் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று ஹொங்கொங் டென்னிஸ் சங்கத் தலைவர் இயான் வாடே தெரிவித்துள்ளார்.

## கனடா சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான் அணியில் அக்தர்

கராச்சி, ஒக். 11

நான்கு நாடுகள் பங்கேற்கும் 20 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி கனடாவில் உள்ள ரொரண்டோவில் நேற்று ஆரம்பமானது.

அதில் பங்கேற்கும் 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் சர்ச்சைக்குரிய வேகப் பந்துவீச்சாளர் செய்ப் அக்தர் இடம்பிடித்துள்ளார். தேசிய அணிக்கு விளையாட ஆர்வம் காட்டியதாலும், தேசிய சம்பியன் போட்டியில் சிறப்பாக திறமையை வெளிப்படுத்தியதாலும் அக்தருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. கடைசியாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியாவில் தேசிய அணிக்காக அவர் விளையாடியுள்ளார். 3 புதுமுக வீரர்களும் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

வேகப்பந்துவீச்சாளர் அன்வர் அலி, துடுப்பாட்டக்காரர் காலித் லத்தீப், சோயப் கான் ஆகியோர் முதன்முதலாக விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

அணி விவரம் வருமாறு: சொய்ப் மலிக் (தலைவர்), மிஸ்பா உல்-ஹக், சல்மான் பட், யுனிஸ்கான், சஹிட் அப்ரிடி, கம்ரன் அக்மல், சோஹல் தன்வீர், சொய்ப் அக்தர், உமர் குல், பவாத் அலம், சோஹால் கான், காலித் லத்தீப், அப்துர் ரவூப், சாய்ப் கான், அன்வர் அலி.

பாகிஸ்தானுடன் இலங்கை, சிம்பாப்வே, கனடா ஆகிய நாடுகள் இப்போட்டியில் பங்கேற்றுள்ளன.

## ஜெலினா ஜன்கோவிக் முன்னிலை

மொஸ்கோ, ஒக். 11

மொஸ்கோவில் நடைபெற்றுவரும் கிரெம்லின் கோப்பை டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் சேர்பிய வீராங்கனை ஜெலினா ஜன்கோவிக் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீராங்கனையான இவர் நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் 6-7, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வேரா துஷேவினாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

ஜங்கோவிக் கடந்த திங்கட்கிழமை தான் செரினா வில்லியம்சை பின்னுக்குத் தள்ளி உலகின் முதல்நிலை வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.



முன்னதாக ரஷ்யாவின் வேரா ஜொனரேவா நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் டேனிலா ஹண்டுசோவாவை 61, 6-0 என்ற நேர் செட்க்ளில் வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

மேலும் ரஷ்யாவின் நாடியா பேட்ரோவாவும் இந்தப் போட்டிகளில் ஸ்பெயினின் கில்லர்மோ கார்சியாவை 6-1, 6-1 என்ற நேர் செட்களில் வீழ்த்தி காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

## புதிய சர்ச்சையில் ஹர்பஜன்!

அமிர்தசரஸ், ஒக். 11

'ரிவி' நிகழ்ச்சி ஒன்றில் நடிகையுடன் நடனமாடிய விவகாரத்தில் ஹர்பஜன் மன்னிப்பு கேட்க வேண்டுமென சீக்கிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் இவர் புதிய சர்ச்சை ஒன்றில் சிக்கியுள்ளார்.'ரிவி' நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற இவர் ராவணன் வேடமிட்டு, மோனா சிங் எனும் நடிகையுடன் நடனமாடினார். இதற்கு சீக்கிய மதத்தின் முக்கிய அமைப்பான அகால் தகத் தலைவர் ஜதேந்தர் குர்பஜன் சிங் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ஹர்பஜன் சீக்கியர்களின் உணர்வைப் புண்படுத்தி விட்டார். எனவே, அவர் மன்னிப்பு கேட்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில்: ஹர்பஜன் நெற்றியில் திலகமிட்டு, ராவணன் வேடமனிந்து 'ரிவி' நிகழ்ச்சியில் நடிகையுடன் நடனமாடியமை மிகவும் வருத்தம் அளிக்கிறது. இதை பல 'ரிவி'க்களும் ஒளிபரப்பு செய்து வருகின்றன. ஹர்பஜனின் நடவடிக்கைகள் சீக்கியர்களின் மனதை புண்படுத்தி விட்டது. இதைப் பார்த்துவிட்டு பொறுமையாக இருக்க முடியாது. தனது செயலுக்காக அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவருக்கு எதிராக இதுவரை யாரும் புகார் தெரிவிக்கவில்லை. புகார் கொடுக்கும் பட்சத்தில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அவர் சீக்கிய முறையில் புனிதஸ் நானம் பெறவில்லை என்பதால் அவருக்கு சம்மன் அளிக்கவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



## ஆஸ்திரிய டென்னிஸ்: பூபதி ஜோடி வெற்றி

வியன்னா, ஒக். 11

ஆஸ்திரியா டென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு இந்தியாவின் மகேஷ் பூபதி, பகாமசின் மார்க் நோவல்ஸ் ஜோடி முன்னேறியது. வியன்னா நகரில் ஆண்களுக்கான ஏ.டி.பி., அந்தஸ்து பெற்ற பாங்க் ஆஸ்திரியா டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இரட்டையர் முதல் சுற்றுப் போட்டியில் பூபதி, மார்க் நோவல்ஸ் ஜோடி, அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பஷ்ஷர், அமெரிக்காவின் டிராவிஸ் பரோட் ஜோடியை சந்தித்தது. பரபரப்பான ஆட்டத்தின் முதல் செட்டை பூபதி, நோவல்ஸ் ஜோடி 6-1 என எளிதாக கைப்பற்றியது. தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பூபதி ஜோடி இரண்டாவது செட்டை 6-2 என தன்வசப்படுத்தியது. இறுதியில் இந்தியாவின் மகேஷ் பூபதி, பகாமசின் மார்க் நோவல்ஸ் ஜோடி 6-1, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணே பொரலஸ்கமுவ சம்பவத்தின் சூத்திரதாரி!

## அ.அட்டை, 'சிம் காட்' மீட்பு; சந்தேகத்தில் எண்மர் கைது

கொழும்பு, ஒக். 11

பொரலஸ்கமுவவிற்கு மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவரே அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் வாகனத் தொடரணி மீது தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டார் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

பொரலஸ்கமுவ பிரிவேனா சந்தியில் நேற்றுமுன்தினம் குண்டு வெடிப்பு இடம்பெற்ற பகுதியில் தேசிய அடையாள அட்டையொன்றும் கையடக்கத் தொலைபேசி 'சிம்' அட்டையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெண் தற்கொலைக் குண்டுதாரியொருவரே தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர் என்று தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர், குறிப்பிட்ட பெண் அப்பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்திருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் வாகனத் தொடரணி மீதான தாக்குதலுக்கு 4 கிலோ நிறையுள்ள குண்டு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர், தற்கொலைக் குண்டுதாரியென சந்தேகிக்கப்படும் பெண்ணின் முகம் முற்றுமுழுதாக சிதைந்துள்ளதால் அடையாளம் காண்பது மிகவும் கடினமாகவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து பொரலஸ்கமுவ பகுதியில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் எட்டுப்பேர் கைது செய்யப்படுள்ளனர். (சி)

# அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தும் நாடகத்திற்கு நாங்கள் இடம்தரமாட்டோம்

## கைதாவதற்கு முன்னர் வைகோ பேச்சு

முதல்வர் கருணாநிதி அனைத்துக் கட்சிக்கூட்டம் நடத்தப் பொவதாக நாடகம் ஆடுகிறார். அதற்கு நாம் இடம் கொடுக்க மாட்டோம்.

இவ்வாறு நேற்றுக் காலை அண்ணாசிலையில் நடைபெற்ற ம.தி.மு.க தொண்டர்கள் திரண்ட கூட்டத்தில் பேசுகையில் வை.கோ கூறினார். அவர் அங்கு பேசியதாவது:

மத்திய அரசு இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகளைச் செய்து வருகிறது. இதனை தடுத்து நிறுத்தும் படி பிரதமருக்கு கடிதம் எழுதினேன். அதில் இந்தியா வழங்கிய ராடர் கருவிகளை திரும்ப பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டிருந்தேன்.

அதற்கு பிரதமர் அளித்த பதில் கடிதத்தில் தமிழர்களுக்கு எதிராக ராடர் கருவிகள் பயன்படுத்தப்பட்டால், அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்வ தாக வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் தொடர்ந்து இலங்கை இராணுவம் அப்பாவித்தமிழர்களைக் கொன்று குவித்து வருகிறது.

அங்குள்ள தமிழர்களுக்கு மருந்துப்பொருள்கள், உணவு ஆகியவற்றை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்ப மத்திய அரசிடம் அனுமதி கேட்டோம். ஆனால் 18 மாதங்களாகியும் இதுவரை அனுமதி தரப்படவில்லை.

இதனைத் தடுத்து நிறுத்தியதில் முக்கிய பங்கு வகித்தவர் தமிழக முதலமைச்சர் கருணாநிதிதான். இதனை அறுதியிட்டு குற்றஞ்சாட்டுவேன். ஈழத் தமிழர் படுகொலைக்கு முக்கிய காரணம் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகள் தான்.

அனைத்து கட்சி கூட்டத்தை நடத்துவோம் என்ற கருணாநிதியின் நாடகத்திற்கு நாங்கள் இடம் தரமாட்டோம் - என்றார்.

முன்னதாக மதிமுகவின் மறியல் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அதிமுகவைச் சேர்ந்த முத்துசாமி வாழ்த்துரை வழங்கினார். தமிழர் தேசிய கட்சியின் தலைவர் பழநெடுமாறன், சிவாஜிலிங்கம் எம்.பி. ஆகியோர் பேசினர்.

## பரந்தனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்ட ஆசிரியரின் கணவர் தாமோதரம்பிள்ளை அருமைநாதன் (வயது - 52) அவருடைய மகனான அருமை நாதன் அஜிந்தன் (வயது - 14) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அத்தாக்குதலில் த.சிவானந் தன் (வயது - 39), க.யோகம்மா (வயது - 65), சி.துவாரகன் (வயது - 13), ம. உசா (வயது - 32) ஆகியோர் காயமடைந்த ஏனைய ஐவரில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பளையில் இருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்தனர் என்று கூறப்பட்டது.

முரசு மோட்டையிலும் தாக்குதல்

அதேநேரம் நேற்றுக்காலை 7.15 மணியளவில் முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயத்தை அண்மித்த மக்கள் குடியிருப்புப் பகுதியில் வான்படை குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளது.

இத்தாக்குதலில் ஒருவர் காய மடைந்துள்ளார். இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களின் வாழ்விடங்கள் சேதமாகியுள்ளன. நேற்றுக்காலை செயற்பாடுகளுக்காக பாடசாலை சென்ற மாணவர்கள் அலறி அடித்து ஓடினர்.

அதேவேளை, பரந்தனுக்கு வடகிழக்கே மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்பு நிலையம் மீது நேற்றுக்காலை 6.30 மணியளவிலும் கிளிநொச்சிக்கு வடகிழக்கே 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் தளபதிகள் ஒன்று கூடும் தலைமையகம் மீது காலை 7 மணியளவிலும், பரந்தனுக்கு மேற்கே ஒன்றரைக்கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கரும்புலிகளின் தளம் மீது காலை 7 மணியளவிலும் விமானப் படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்று படைத்தரப்பில் கூறப்பட்டது. (அ-சி)

## அஞ்சலி செய்கிறோம்



### சிவகுரு ஆறுமுகம் பண்டிதர்

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் கோயில் பரிபாலனசபை உறுப்பினராய், உப தலைவராய், ஆலயத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் புராண படிப்பின் பௌர்ணிகராய் பல நிலைகளில் ஆலயத் தொண்டு புரிந்த பெருமகன் மறைந்துவிட்டார் என அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரின் ஆத்மா விநாயகர் தாழ்களில் சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் கோயில் பரிபாலனசபை சார்பில்.

| | | |
|---|---|---|
| த.வீரசிங்கம் (தலைவர்). | S.R.சரவணபவன் (செயலாளர்). | இ.நடராசா (பொருளாளர்). |


## Organ Violin Notes

*Organ*, வயிலின், *Guitar* புல்லாங்குழல், வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக் குண்டு. *Organ, Guiter*, புல்லாங்குழல் வகுப்புகள் தினமும் மாலை 4 மணியிலிருந்து நடைபெறுகின்றன.

S.S. Rajendran

75, கோயில் வீதி, நல்லூர், தொ.பே.:0713055991

## விற்பனைக்கு

DENYO (MADE IN JAPAN)

*25 Kilo WATT* உற்பத்தித்திறன் கொண்ட நல்ல நிலையிலுள்ள டீசல் ஜெனறேட்டர் *(Sound proof 25)* விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

59, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்,

தொ.பே.: 0777734083


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை

அருட்சகோதரி பிலோமினா மத்தியாஸ்

அவர்களின் அன்புத் தாய்

### திருமதி லூர்த்தம்மா மத்தியாஸ்

அவர்களது மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவரை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,

யா/புனித சாள்ஸ் ம.வி.

## மரண அறிவித்தல்

### திருமதி லூர்த்தம்மா மத்தியாஸ்



புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லூர்த்தம்மா மத்தியாஸ் 09.10.2008 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப் பிள்ளை மத்தியாஸின் அன்பு மனைவியும் அன்ரனி பத்மராஜா (நோர்வே), அல்வினஸ் ஆனந்தராஜா (கனடா), அல்பேட்லங் கராஜா (ஜேர்மனி), அருட்சகோதரி பிலோமினா (திருக்குடும்ப மாகாண இல்லம், யாழ்ப்பாணம்), லூட்ஸ் லதா (கனடா), டொறின் சாந்தி(கனடா), பத்மராஜகுமாரி (கனடா), அனித்தா மாலதி(பருத்தித்துறை) ஆகியோரின் பாச மிகு தாயும் மரினா, மரியா, ராஜநிதி, கிறேஷியன், ஜோர்ஜ், கென்னடி, பிறேமதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும் கிளின்ரன், வெனிற்றா, அனிஸ்ரன், யூலியான், தபியா, ஜோணத்தான், அன்றூ, ஜெமி, றொங்கிளின், ஸ்ரீபன், எல்வின், ஆன், ஆன்வுன், ஸ்ரெபான், சஞ்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (11.10.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற்திருப்பலியின் பின்னர் கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரியவத்தை,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

தகவல் :
அருட் சகோதரி பிலோமினா,
திருக்குடும்ப மாகாண இல்லம், யாழ்ப்பாணம்.

## மாட்டுவண்டிச் சவாரி

புத்தூர் கிழக்கு, மத்திய விளையாட்டுக் கழக வளர்ச்சி நிதிக்காக மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை 12.10.2008 ஞாயிற்றுக்கிழமை மதியம் 1 மணியளவில் நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறும்.

மாட்டுவண்டி உரிமையாளர்கள் தமது பதிவுகளை முன்கூட்டியே சவாரித்திடலில் பதிவு செய்து கொள்ளவும். அனைத்து சவாரிப்பிரியர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

நிர்வாகம்:
புத்தூர் கிழக்கு,
மத்திய விளையாட்டுக்கழகம்,
புத்தூர்.


ALLIANCE FRANCAISE DE JAFFNA

83, Palaly Road, Kantharmadam, Jaffna.

Phone:021 222 8093, E-mail:alliancejaffna@yahoo.com

**Learn Franch the Franec Way**

France Classes - பிரெஞ்சு மொழி வகுப்புகள்

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் மூலமும் *Alliance francaise de paris* ஊடாகவும் சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகின்றன.

மாணவர்கள், ஆசிரியர்கள், ஆர்வமுள்ள அனைவரும் கற்கலாம்.

தொடர்ச்சியான 100 *h* கற்கையின் மூலம் உள்ளக பரீட்சைக்கும் 200 *h* கற்கையின் மூலம் சர்வதேச பரீட்சைக்கும் (*DELE*) தோற்றலாம்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. வகுப்புகள் - சனி, ஞாயிறுகளில்

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். கட்டணம், ஏனைய விவரங்களை நேரில்/தொலைபேசியின் ஊடாக பெறலாம்.


### திருமதி இராமாமிர்தம் சண்முகசுந்தரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/வண்.நாவலர் வித்தியாலயம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிபிடமாகவும் கொண்ட திருமதி இராமாமிர்தம் சண்முகசுந்தரம் நேற்று (10.10.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - தையல்நாயகி தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற சண்முகசுந்தரத்தின் (பிரதம இலிகிதர், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை) அருமை மனைவியும் ஜெயந்தி, வசந்தி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), ஸ்ரீதரன் (ஆசிரியர், மன்னார் சென்சேவியர் கல்லூரி), காலஞ்சென்ற ரவிதரன், காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் ஆனந்தி (ஆசிரியை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் மாரிமுத்து, அமரர் இரத்தினகோபால் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கண்ணபிரான் (ஓய்வுபெற்ற மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை), குஞ்சிதபாதம் (கணக்காளர் *ESP&CO*), சிவகுமாரன் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி), மஞ்சுளா ஆகியோரின் மாமியாரும் செந்தூரன் *(Soft ware Engineer, Assest, Colombo)*, நிவேதினி (ஆசிரியை, வவுனியா பூவரசன்குளம் மகாவித்தியாலயம்), கௌதமன் (மாணவன், யா/பல்கலைக்கழகம்), ராஜாதித்தன் (சவுதிஅரேபியா), சாண்டில்ஜன் (மாணவன், யா/ இந்துக் கல்லூரி), வைஷ்ணவி (மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), சைலேஷ், உமையாள், விஷ்ணுகரன், தரங்கினி, ரவிவர்மன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*185/9, கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
*தி.குஞ்சிதபாதம்*
*(மருமகன்).*

## சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவில் இன்று சிறுவர் தின நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் டாக்டர் ஆர். கணேசமூர்த்தி, டாக்டர் என். ஜெயக்குமரன், கரித்தாஸ் - கியூடெக் பணிப்பாளர் வண. ஜி.ஜெயக்குமார் ஆகியோர் விசேட உரை நிகழ்த்துவர்.

கரித்தாஸ் - கியூடேக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (1)

## மூன்றாம் ஆண்டு நினைவு

அமரர் பாலசிங்கம் நடனகுமார் (சிவா)



அன்னையின் மடியில் 12.03.1965

ஈழத்துத் தில்லை நாயகி சமேத நடராஜரின் திருப்பாதக் கமலங்களில் சரண் 11.10.2005

அன்புச் சிவா!
எங்கள் வீட்டில் ஒளிதந்த
தூண்டா மணி விளக்கே!
நீ ஓடி மறைந்து
ஆண்டுகள் மூன்றானதுவோ?
முல்லை மலர்ச் சிரிப்பும்
முகம் மலர்ந்த தாமரையும்
சொல்ல வொண்ணாச் சோகத்தில்
எம்மை அழுத்துதையா!
நவராத்திரி நன் நாளில்
நம்மருகே சிவா உனது
புன்னகையைப் பூவாய் உதிர்ப்பாய்
எண்ணி இப்போது பார்க்க
இதயம் வெடிக்குதடா....
அம்பாளின் பாதம் நீ அருகிருந்து
எமக்கு வேண்டும் வரம் அருள
வேண்டுமென்று
வேண்டுகிறோம்-துடிக்கின்றோம்.
ஆத்மா சாந்தி பெறுக

*''துவாரகா''*
*சிவகாமி அம்மன் கோயிலடி,*
*காரைநகர்.*

குடும்பத்தினர்.

(72949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசுக்கு அளிக்கும் ஆதரவை கருணாநிதி உடன் திரும்பப் பெறவேண்டும்

## அனைத்துக் கட்சிக் கூட்டம் வெறும் கண்துடைப்பு; புறக்கணிப்போம்



ஈழத் தமிழர்கள் மீது உண்மையிலேயே கருணாநிதிக்கு அக்கறை இருக்குமானால், அவர்கள் மீது அரக்கத்தனமாக - காட்டுமிராண்டித்தனமாக - விலங்குகளை விடக் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தி வரும் இலங்கை இராணுவத்திற்கு ஆயுதங்கள் வழங்கிப் பயிற்சியளிக்கும் இந்திய அரசுக்கு தி.மு.க. அளித்துவரும் ஆதரவை உடனடி யாகத் திரும்பப் பெறவேண்டும்.

அதை விட்டு விட்டு, அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்துவதெல்லாம் வெறும் கண்துடைப்பு நாடகம். இது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எனவே, இந்தக் கண்துடைப்பு நாடகமான அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அ.தி. மு.க. புறக்கணிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கை இராணுவத்தால் ஈழத் தமிழர்கள் அரக்கத்தனமாக- கண்மூடித்தனமாக, - விலங்குகளை விடக் கொடூரமான முறையில் தாக்கப்படுகின்றமையைக் கண்டித்து நேற்று ம.தி.மு.க. சார்பில் சென்னையில் அறப்போராட்டம் நடைபெற்றது. அறப்போராட்டம் ஆரம்பிக்கும் இடத்தில், அதற்கான ஏற்பாடுகளை அக்கட்சியினர் செய்திருந்தனர்.

திடீரென்று பொலிஸார், வன்முறையாளர்களைப்போல களத்தில் இறங்கி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடிகளையும், சுவரொட்டிகளையும், பதாகைகளையும் கிழித்து எறிந்து அனைத்தையும் கொண்டு சென்றுவிட்டனர்.

இதற்குக் காரணம் கேட்டால், மேலிடத்தின் உத்தரவு என்று காவல் துறையினரால் கூறப்படுகிறது. தமிழர்களுக்கு ஆதரவாக ம.தி.மு.க. நடத்தும் அறப்போராட்டத்தில், அ.தி.மு.க. சார்பில் வாழ்த்துரை வழங்கப் படவிருக்கிறது என்றவுடன், பொலிஸார் மூலம் நடத்தப்பட்ட இந்த சம்பவத்துக்கு முதலமைச்சர் கருணாநிதிக்கும், பொலிஸாருக்கும் முதலில் என் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மத்தியில் உள்ள பதவியை ஏன் ராஜினாமாச் செய்யவில்லை**

ஈழத் தமிழர் பிரச்சினையை நான் கையில் எடுத்துக்கொண்டமையாலும், பல தரப்புகளிலிருந்து தனக்கு எதிர்ப்புகள் வந்தமையாலும், தற்போது ஈழத் தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் தாக்கப்படுவது குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார் கருணாநிதி. இது வெறும் கண்துடைப்பு நாடகம்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இல்லாதபோது, சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தோம் எனக் கூறும் கருணாநிதி, தற்போது மத்தியிலும், மாநிலத்திலும் அதிகாரத்தில் இருக்கும் போது, ஏன் தன்னுடைய பதவியை ராஜினாமாச் செய்ய முன்வரவில்லை?

இதேவேளை, ம.தி.மு.கவும் அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைப் புறக்கணிக்கும் என அறிவித்திருக்கிறது. (அ-சி)



கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் நேற்று 2ஆம் லெப். மாலதியின் 21 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நடைபெற்றது.

படையினரின் உக்கிரமான தாக்குதல்கள் நடைபெற்று வரும் பகுதியிலிருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள இரணைமடுச் சந்தியில் 2 ஆம் லெப். மாலதியின் 21ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மாலதியின் சிலைக்கு தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சுதாமினி மலர்மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். இந்நிகழ்வில் பெருமளவு மக்கள் மற்றும் போராளிகள் கலந்து கொண்டனர்.

# ஜானக பெரேராவின் கொலைக் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் ஆற்றல் பொலிஸாருக்கு உண்டு

## வெளிநாட்டு உதவி தேவையில்லை என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஒக்.11

ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 28 பேரைப் பலிகொண்ட அநுராதபுரம் தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக நேர்மையானதும் பக்கச் சார்பற்றதுமான விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற சபாரதி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

அநுராதபுரம் தற்கொலைத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கென அரசு 3 விசேட குழுக்களை நியமித்துள்ளது. எந்தவொரு கோணத்திலிருந்தும் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆற்றல் எமது பாதுகாப்புப் பிரிவுக்கு உள்ளது. இந்நிலையில் நாம் வெளிநாடுகளின் உதவியை ஏன் கோரவேண்டும்.

**வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு இடம் தரமாட்டோம்**

அரசு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு உட்படாது. வெளிநாடுகளுடன் அளவுக்கு மீறி நெகிழ்வுத் தன்மையை வெளிப்படுத்துவதன் மூலம் நாட்டின் இறைமை இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படும். யுத்த நிறுத்த உடன்படிக்கையிலும் இந்நிலை உருவாகியது.

நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இணைவாக அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படும். இப்பயணத்தில் மக்களுக்கு ஏதும் அசௌகரியங்கள் ஏற்படுமாயின் அது தற்காலிகமானவை. ஏனெனில், நாட்டு மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே அரசு செயற்படுகிறது.

வடக்கை மீட்பதற்காக படையினருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி வருவதுடன், அர்ப்பணிப்புடன் போராடிவரும் படையினருக்கு அரசு தனது பாராட்டையும், நன்றிகளையும் எப்போதும் தெரிவித்து வருகிறது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடும் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்கு மனிதாபிமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

பயங்கரவாதச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் அரச மேற்கொண்டு வருகிறது. இவ்வாறான உதவிகளை இலங்கை அரசு மட்டுமே செய்து வருகிறது - என்றார் பிரதமர். (அ-சி)

### அச்சுறுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அமைச்சர்களின் பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பில் அவர்களின் பாதுகாப்பு படைப்பிரிவினர் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் கலந்துரையாடினர் என்றுமற்றொரு தகவல் தெரிவித்தது. (அ-சி)

### வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

டிக்ஷன் டெல பண்டார சப்பிரகமுவமாகாணத்தின் ஆளுநராக பதவி வகித்து வந்தார். சப்பிரகமுவ மாகாணசபை தேர்த லின் பின்னர் சப்பிரகமுவ புதிய ஆளுந ராக மொகட் எல்லவல ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

இதனை அடுத்து தற்போது டிக்ஷன் பெல பண்டார வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். (அ-சி)


**வேலைவாய்ப்பு**

★ கம்பியூட்டர் ரைப் செற்றிங் செய்வதில் முன் அனுபவம்/ நல்ல தேர்ச்சி உள்ளவர்கள் (பெண்கள்) தேவை.
(சம்பளம் 8000-10000 வரையில் வழங்கப்படும்)

★ ஓரளவு ரைப்செற்றிங், போட்டோப் பிரதி செய்யக்கூடியவர்கள் (பெண்கள்) தேவை.
(சம்பளம் 3000- 5000வரையில் வழங்கப்படும்)

உடன் தொடர்பு கொள்ளவும்.

பரணி தொழில் நுட்ப சேவை,
166, நாவலர் வீதி, யாழ்.
T.P.222 7442


### வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைய நிலையில் 14000 தற்காலிக கொட்டில்கள் தேவைப்படுகின்றன. 12500 தறப்பால்களும் தேவைப்படுகின்றன. இந்தத் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய் யக்கூடிய நிலை அங்கு காணப்படவில்லை.

பல வைத்தியசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளிலுள்ள வைத்திய சாலைகள் இயங்கிவருகின்றன. கிளிநொச் சியிலுள்ள வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகள் இருந்தபோதும் அவசர தேவை கருதி அதனை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவருகிறது.

வங்கிகளில் பணம் போதாத நிலை தோன்றி உள்ளது. பணத்தைக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையை வங்கி அதிகாரிகள் எடுத்து வருகின்றார்கள் - என்றார் (அ-1-ரி)

# தொண்டு அமைப்புகள் வன்னி செல்ல இந்தியா உரிய அழுத்தம் தரவேண்டும்

## பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்து

''சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வன்னிக்குள் சென்று அங்குள்ள மக்களுக்கு உதவி வழங்குவதற்கு உடனடியாக அனுமதி வழங்கப்படவேண்டும். இதனை இலங்கை அரசிடம்இந்தியா அழுத்தமாக்கூறவேண்டும்.''

இவ்வாறு தமிழகத்தின் பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியிருக்கின்றார். திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் நேற்று பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக வரும் 14ஆம் திகதி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் தங்கள் வேறுபாடுகளை மறந்து ஈழத் தமிழர்களுக்காக ஓரணியில் திரள வேண்டும் என்று உலகெங்கும் வாழும் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதற்கான நல்ல வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் 14ஆம் திதகி நடைபெறும் அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும், முடிவுகளும் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சனையில் இந்திய அரசுஎன்னென்ன செய்ய வேண்டும் என்பதை இந்த கூட்டத்தில் முடிவு செய்து அறிவிப்பதுடன் நில்லாமல், ஒரு காலக் கெடுவுக்குள் அந்த முடிவுகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசை எடுக்கச் செய்ய வேண்டும்.

இலங்கை இராணுவத்திற்கு மறைமுகமாக செய்யப்பட்டு வரும் உதவிகள் நிறுத்தப்பட வேண்டும். இந்த அங்கீகாரத்தின் மூலம் அமையப்போவது தனி நாடா? அல்லது சுயாட்சி உரிமையா? என்பதை அவர்களின் முடிவுக்கே விட்டுவிட வேண்டும். இந்த நிலையில் தமிழக முதல்வர் எடுக்கும் முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவு கொடுப்போம்.

- என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார். (சி)

### அனைத்துக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி மாநாட்டில் ஜே.வி.பியும், ஐ.தே. கட்சியும் பங்கேற்கா என்று அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

பல வருடங்களாகக் கூட்டப்பட்டு இழுபட்டு வரும் இம்மாநாட்டினால் இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை. ஆதலினால் இந்த மாநாட்டில் பங்கேற்பதற்கு நமது கட்சி விரும்பவில்லை என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று ஜானக பெரேராவின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்ளவேண்டி இருப் பதால் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள் வது தொடர்பாக இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். பெரும்பாலும் ஐ.தே.க. இன்றைய அமர்வில் பங்கேற்காது என்று தெரிகிறது.

''சர்வகட்சி மாநாட்டிற்கான அழைப்பு இதுவரை எமது கட்சிக்கு வரவில்லை. ஆனால் இம்மாநாடானது சர்வதேசத்தையும், தமிழ் மக்களையும் ஏமாற்றுவதற்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இராணுவ நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதற்கான கருத்துப் பகிர்வுக்காகவே இம்மா நாடு கூட்டப்படுகிறது. அப்படி எமக்கு அழைப்பு வந்தால் எமது கட்சி கூடி மாநாட் டிற்குச் செல்வதா இல்லையா என்பது குறித்து முடிவு எடுக்கும்.'' - எனத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சிச் செயலாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (சி)

### மறியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி நேற்றுக்காலை அண்ணா சாலையில் உள்ள காயிதே மில்லத் அரச மகளிர் கல்லூரியில் ஆயிரக்கணக்கான ம.தி.மு.க. தொண்டர்கள் திரண்டனர். காலை 10 மணியளவில் வைகோ தொண்டர்களிடையே பேசினார்.

கூட்டம்முடிந்ததும் கூடியிருந்த தொண்டர்களுடன் வைகோ, காயிதேமில்லத் கல்லூரியிலிருந்து சாஸ்திரி பவன் நோக்கி மறியல் போராட்டம் செய்வதற்காக அணி அணியாக புறப்பட்டுச் சென்றனர். அப்போது அங்கு கூடியிருந்த பொலிஸார் அவர்களைக் கைது செய்து வாகனத்தில் அழைத்து சென்றனர். (அ-சி)

### வன்னிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழும் மக் களுக்கு உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படுகின்ற இரண்டாவது தொகுதி உணவுப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்தன.

உணவு வாகனத் தொடரணியை புளியங்குளம் நெடுங்கேணி ஊடாக ஒட்டுசுட்டான் வீதியைப் பயன்படுத்துமாறு உலக உணவுத் திட்ட வவுனியா அதிகாரிகளிடம் படைத்தரப்பு தெரிவித்திருக்கிறது.

குறிப்பிட்ட வீதியை பாதுகாப்பு மதிப்பீடு செய்வதற்குரிய குழு ஒன்றை அனுப்பி அந்த மதிப்பீடு கிடைத்த பின்னர்தான் வாகனத் தொடரணியை அனுப்ப முடியும் என்று படைத்தரப்பு தெரிவித்திருக்கிறது.

எதிர்வரும் திங்களன்று அல்லது செவ்வாய்க்கிழமையே பாதுகாப்பு மதிப்பீடு செய்யும் குழு அங்கு செல்லும் என்றும் படைத்தரப்பு மேலும் தெரிவித் திருக்கிறது.

இதுதொடர்பாக வவுனியா இராணுவக் கட்டளைத் தளபதி கிளிநொச்சி அரச அதிபருக்கு நேற்று மதியம் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதனால் அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துச்செல்லும் வாகனத் தொடரணி செல்வதில் தாமதம் ஏற்படும் என்று கூறப்படுகின்றது. (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org